# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜூன் 2002 ஜீவியம் 8 மலர் 2**

இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 21 |
| லைப் டிவைன் | 22 |
| சாவித்ரி | 28 |
| அன்பர் கடிதம் | 30 |
| மனத்தால் செய்யும் வேலை மதர் செய்யும் வேலை | 35 |
| சிறு குறிப்புகள் | 41 |
| அபரிமிதமான செல்வம் | 43 |
| லைப் டிவைன் - கருத்து | 49 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 51 |
| புலன்களுக்குப் புலப்படாதது | 61 |

* * *

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

எண் 700-710இன் விளக்கம் செப்டம்பர் 2000 இதழில் வெளியாகியுள்ளது.

**711) அகந்தையின் ஆயுள் முடிந்துவிட்டது. அது கரைய வேண்டும். அகந்தையின் வளர்ந்த நிலையான குடும்பம் கரைவதும் அவசியமாகும்.**

*வரும் காலத்தில் அகந்தைக்கும், குடும்பத்திற்கும் வேலையில்லை.*

கர்வம், திமிர் என்பதை நாம் அகந்தை என்றறிவோம். உலகத்திலிருந்தும், பரமாத்மாவிலிருந்தும், ஜீவாத்மாவைப் பிரிப்பது அகந்தை என்கிறார். ஒருவர் அடிபட்டு விழுந்தால், நம்முடலில் வலி தெரிவதில்லை. ஏனெனில் அவனுடல், நம் உடலிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. பிரிப்பது அகந்தை. சம்பந்தமில்லாத ஒருவர் வெற்றி நமக்கு சந்தோஷம் தருவதில்லை. ஏனெனில் அவனுடைய சந்தோஷம் வேறு, நம் சந்தோஷம் வேறு. இவற்றைப் பிரிப்பது அகந்தை. எதிரேயுள்ளவருடைய எண்ணம் நமக்குப் புலப்படுவதில்லை. புலப்படாமல் தடுப்பது அகந்தை. அகந்தை அழிந்த நிலையில் பிறர் எண்ணம் நம் எண்ணமாகவும், மற்றவர் உணர்ச்சி நம் உணர்ச்சியாகவும், அடுத்தவர் வலி நம் உடலின் வலியாகவும் தெரியும். அது தெரியாதவரை அகந்தையுள்ளது எனப் பொருள்.

மனிதன் வளர ஆரம்பித்த காலத்தில் அவன் தனித்துச் சாதிக்க அவனைச் சுற்றியொரு வேலியிருந்தது. உதாரணமாக ஒரு சிறுவன் படிக்க வேண்டுமானால், அவன் எதையும் கற்றுக் கொள்ளலாம், எவரும் அவனுக்குப் பாடம் சொல்லித் தரலாம். நடைமுறையில் அவனும் படிப்பதில்லை, எவரும் சொல்லித் தருவதில்லை. அவனுக்குப் படிப்பு வருவதில்லை. படிப்பு வரவேண்டுமானால், முதலில் அவனைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும், விளையாடுவதிலிருந்து தடுக்க வேண்டும், பள்ளியில் ஒரே வகுப்பில் இருத்த வேண்டும், ஆசிரியர் சொல்வதைக் கண்டிப்பாகப் படித்து, எழுதிப் பயிலவேண்டும். வீட்டிலிருந்தும், விளையாட்டிலிருந்தும் பிரித்து, ஒரே வகுப்பில் இருத்தி, படிக்கச் சொன்னால்தான் படிப்பு வரும். இந்தத் தடைகளும், முறைகளும் சிறுவன் படிப்பைச் சாதிக்க அவசியம். அதுபோல் ஒரு ஆத்மா, தான் சாதிக்க அதற்கென ஓர் உடல் தேவை. பிறர் செயலிலிருந்து தன்னை அவ்வாத்மா பிரித்துக் கொள்ள வேண்டும். இதற்குச் சுயநலம் உதவும். அகந்தை எனும் கூட்டுக்குள் சுயநல வேலியால் ஒருவர் சாதனை பூர்த்தி பெறும். இவ்வேலையைக் கடந்த பல்லாயிரம் ஆண்டுகளாக அகந்தை செய்தது. அதன் காலம் முடிந்துவிட்டது. இனியும் அகந்தையின் எல்லைக்குள் சுயநலத்தால் மனிதன் செயல்பட முடியாது. இனி அவன் சாதனை உலகத்திற்கும், பிரபஞ்சத்திற்கும், இறைவனுக்கும் தேவை. அதை அகந்தையுள் பூர்த்தி செய்ய முடியாது. எனவே அகந்தை அழிய வேண்டும்.

உலகம் என்ற ஆபரணத்தில் வைரமாக ஜொலிப்பது குடும்பம். உலகம் என்ற மாளிகையில் குடும்பம் ஒரு செங்கல். இது மனிதனைத் தயார் செய்து உலகுக்களித்தது. தயார் செய்யும்பொழுது அவனது அகந்தையையும், சுயநலத்தையும் விரிவுபடுத்தி, குடும்பத்தின் சுயநலமாக, குடும்பத்தின் அகந்தையாக்கியது. தனிமனிதனுடைய பரநலம், குடும்பத்தின் சுயநலமாயிற்று. உலகம் ஒரே மனித சமுதாயமாக வேண்டும் என்ற நிலையில், சுயநலமான குடும்பம் அழிந்து, பரநலத்தை அடிப்படையாகக் கொண்ட பொது ஸ்தாபனங்கள் (company, institution, society) கம்பனி, ஸ்தாபனம், சொஸைட்டி ஆகியவை அதற்குப் பதிலாக எழ வேண்டும்.

முடியாட்சி முடிந்துவிட்டதால் இனி ராஜாயில்லை. விறகு அடுப்பு

மாறிவிட்டதால் இனி காஸ் அடுப்புதான். விறகும், அடுப்புமில்லை என்பதுபோல் இன்று மாறியவை ஆயிரம். அதற்கு விளக்கம் தேவையில்லை. போனதை திரும்ப கொண்டு வர முடியாது. போவதைத் தடுக்க முடியாது.

அகந்தை உலகத்திற்குச் செய்த சேவை பெரியது. இன்று மனிதன் உள்ள நிலைக்கு அவனைக் கொண்டு வந்தது அகந்தை என்கிறார் அன்னை. ஆனால் இனி அது தேவையில்லை எனில் அதை நாம் விட்டுவிட வேண்டும். மேலும் அதையொட்டி குடும்பமும் கரைய வேண்டும் என்கிறார் அன்னை.

இவற்றைப் புரிந்து கொள்வது சிரமம். அரசியலில் இதுபோன்ற பெரிய கருத்துகள் உண்டு. நாம் அவற்றை ஆராய்ச்சி செய்யாவிட்டாலும், குறிப்பிடலாம்.

❖ இனி ராணுவம் தேவையில்லை.

❖ இனி பணம் இருக்காது.

❖ National market உள்நாட்டு மார்க்கெட் போகிறது. உலகமே மார்க்கெட்டாகும். Global market is the only market.

- கல்லூரிகட்கு எதிர்காலமில்லை என்றெல்லாம் பேசுகின்றனர். இராணுவம்தான் இதுவரை நமக்குப் பாதுகாப்பு அளித்தது. எல்லையைக் காத்தது. இதுவரை இராணுவம் என ஒன்றில்லாவிட்டால், நாடு என்பதிருக்காது. நாடு, வாழ்வு, மார்க்கெட், சரித்திரம் ஆகியவற்றை இதுவரை ஏற்படுத்தியது இராணுவம். இராணுவத்தின் காலம் முடிந்துவிட்டது. இனி இராணுவம் கலைக்கப்பட வேண்டும். ஆயுதங்களை அழிக்க வேண்டும் என்ற கருத்து பெரும்பாலும் ஏற்பட்டு வருகிறது.



பவுன், வெள்ளி பணமாக இருந்த நாள் போய் 100 ஆண்டுகளாகிறது. கரன்சி, நோட் பணமாயிற்று. இன்று நாம் வாழும் உலகம், பெற்ற வசதிகள், படித்த படிப்பு, ஞானம் அனைத்தையும் பணத்தால் பெற்றோம். மேல் நாடுகளில் 50 ஆண்டுகட்கு முன் பணப்புழக்கம் குறைந்தது. செக் cheque வந்தது. செக் வந்தபின் பணம் பின்னணிக்குப் போயிற்று. 20 ஆண்டுகட்கு முன் credit card கார்ட் வந்தது. கார்ட் வந்தபிறகு அவர்கள் நோட்டைப் பார்க்கவேயில்லை. இனி பணம் இருக்காது என்கிறார்கள். அதே போல் நாடு, உள்நாட்டு மார்க்கெட், கல்லூரி, பட்டமிருக்காது என்ற கருத்து அதிகமாக ஏற்கப்படுகிறது.

திருமணம் பெரும்பாலும் மேல்நாடுகளில் இப்பொழுதில்லை. குடும்பம் என்பது தனிமனிதன் ஏற்படுத்தியது. அகந்தை வளர மனிதன் குடும்பத்தை ஏற்படுத்தினான். அகந்தையே அழிய வேண்டும் எனில் அதன் அடிப்படையில் ஏற்பட்ட குடும்பம் அழிய வேண்டும் என்பது சரியாகப்படுகிறது. ஆனால் ஏன் குடும்பம் அழிய வேண்டும்? அழிந்தால் பிள்ளைகளை யார் வளர்ப்பார்கள்? பண்பு எப்படி அடுத்த தலைமுறைக்கு வரும் என்ற பெரிய கேள்விகள் எழுகின்றன. இவை யுகத்திற்குரிய கேள்விகள். பதிலும் யுகதர்மத்திற்குரியதே. சுருக்கமாக அன்னை சொல்லியவற்றையும், அதன் அடிப்படையில் ஏற்படும் விளக்கங்களையும் கூறலாம்.

❖ பண்பு ஏற்பட பாசம், வசதி, படிப்பு தேவை.

❖ வசதியும், படிப்பும் நாட்டில் வளம் பெருகினால் பெருக வாய்ப்புண்டு.

❖ பாசம் என்பது இன்று ஓரளவுக்கு வசதியாலும், படிப்பாலும் ஏற்படுவதென்றே சொல்லலாம். அதைக் கடந்த பாசம் உண்டு. அது குறைவு. விதிவிலக்கு.

❖ விதிக்கு வழியேற்பட்டால், பிறகு விதிவிலக்குக்கும் வழி ஏற்பட முடியும்.

❖ Information, data, education செய்தியும், படிப்பும் அதிகமாக

வளர்ந்தால் பாசம் இன்று அளிப்பதை அன்று வசதி அளிக்க முடியும். இது குழந்தைக்குப் பெருங்கல்வியும் அதிக வசதியும் வரும்பொழுது தாய்ப் பாசத்தை முழுவதும் தரமுடியும். இன்று குடும்பம் தரும் பாசத்தை அன்று தாய் தரமுடியும். ஒரு காப்பகமும் (creche) தரமுடியும்.

❖ விலக்காக இன்று நாம் தாயிடம் பெறாத அன்பை, காப்பகத்தில் குழந்தை பெறுவதையும் காண்கிறோம்.

❋ ❋ ❋

**712) தேசத்தின் ஆத்மா வளர்ந்து பிரபஞ்சத்தின் ஆத்மாவாக மாற இருக்கும் நிலையில் குடும்பம் அழிய வேண்டும் என்பது முரணானது. குடும்பம் கரைந்தாலன்றி அகந்தை கரையாது என்பது உண்மை. முரணாகத் தெரிந்தாலும், முரண்பாடில்லை.**

*தேசமும், பிரபஞ்சமும் வளர குடும்பம் அழிய வேண்டும்.*

மனிதன் உயர்ந்து, குடும்பத்தை ஏற்று, குடும்பம் சமுதாயத்தை ஏற்று, சமுதாயம் நாட்டை ஏற்பது என்பது நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியது. நாட்டின் ஆத்மா வளர்ந்து உலகின் ஆத்மா ஆகவேண்டும் என்ற நிலையில், இடைப்பட்ட குடும்பம் அழியவேண்டும் என்பது தொடரை அறுப்பது போலுள்ளது. உண்மை வேறு.

அன்னை அனைத்திலும் புரட்சிகரமானவர். மதவழிபாடு என்பதை அறவே ஏற்க முடியாதவர். அவர் தாயார் தெய்வநம்பிக்கை அறவேயில்லாத பகுத்தறிவுவாதி. God, கடவுள் என்ற சொல்லே அன்னைக்குப் பிடிக்காது. ஐரோப்பாவில் இச்சொல்லை வைத்துச் செய்த அட்டூழியங்கள் அனைத்தையும் அறிந்தவர் அன்னை. எந்தச் சட்டத்திற்கும் தன்னை உட்படுத்திக் கொள்ள விரும்பாதவர் அன்னை. அவருடைய புரட்சிகரமான கருத்துகளில் இங்கு நாம் முக்கியமாகக் கருதுபவை,



❖ சொத்துரிமை கூடாது.

❖ ஒருவர் பெற்ற சொத்தை அவர் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடாது.

❖ திருமணம் பெண்களுக்கு விலங்கு.

குடும்பம் என்பதன் கரு திருமணம். அதற்கு ஆதரவு சொத்து. அதை ஆர்வமாகப் பாதுகாப்பது வாரிசுக்காக. இவை அனைத்தும் அன்னைக்கு உடன்பாடில்லை. திருமணம், சொத்து, வாரிசு இல்லை எனில் குடும்பம் மறைந்து போகும். அதுவே அன்னையின் இலட்சியம்.

இன்றைய சமூகம் நாட்டின் எல்லைவரை பரவியுள்ளது. அதன் அடிக்கல் குடும்பம். எதிர்காலச் சமூகம் நாட்டின் எல்லையைக் கடந்து உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பது அன்னையின் கொள்கை. உலகச் சமுதாயத்திற்கு இன்றைய அடிக்கல் (unit) உதவாது. அதற்குரிய பெரிய அடிக்கல் தேவை. அதன் கொள்கை அகந்தையாக இருக்க முடியாது. அது போன்றவை இன்றெழுந்துள்ள சமூக ஸ்தாபனங்களான கம்பனி, சொசைட்டி போன்றவை. அவற்றுள் அகந்தை வளர சந்தர்ப்பமில்லை. ஆயிரமாயிரம் பேர் கொண்ட இந்நிறுவனங்கள் 8 பேர் 10 பேர் கொண்ட குடும்பத்தை விட 1000 மடங்கு பெரியது. பெரியது என்பதால் பெரிய சமுதாயமான மனித குலத்திற்கு இவை அடிக்கல்லாக அமையும். அகந்தை வளரும் நிலை இவற்றுள் இல்லை என்பதும் முக்கியம். அகந்தை அழிந்த நிலையில் வேலை மட்டுமே இருக்கும். தான் எனும் முனைப்போ, தன் குடும்பம் என்ற மனநிலையோ இல்லாமல், கடமையைச் செய்யும் சூழ்நிலை இருக்கும்.

அந்த ஸ்தாபனம் உலகச் சமுதாயத்தை உண்டு பண்ணும். அகந்தை, சுயநலம் ஆகியவையால் வளர்க்கப்பட்ட சூழ்நிலைகளையும், இவற்றை வளர்க்க உதவும் ஸ்தாபனங்களையும் அன்னை விலக்க முயல்வதால், திருமணம், சொத்துரிமை, குடும்பம் ஆகியவை இனித் தேவையில்லை என்பது அவர் நிலை.

டெல்லி ஹோட்டலில் ஒருவர் 100 ரூபாய்க்குச் சில்லரை கேட்டார். சில்லரையில் ரூ.5/- நோட்டு வரவில்லை. அது வேண்டும் எனக் கேட்டார். சில்லரை கொடுத்தவர் சிரித்துவிட்டு இப்பொழுது டெல்லியில் ரூ.5/- நோட்டை யாரும் பயன்படுத்துவதில்லை என்றார்.

இந்திய ஏற்றுமதி வியாபாரி 25 வருஷத்திற்கு முன் நியூயார்க் பேங்க் ஒன்றில் கணக்கு வைத்திருந்தார். இவர் சிறு வியாபாரி. ஆர்டர்கள் 10 லட்சம், 20 லட்சம் என்று வரும். பாங்க் இவர் கடிதங்களுக்கு பதில் போடுவதில்லை. சங்கடமான நிலை. நியூயார்க் சென்ற பொழுது பாங்க்கிற்குப் போனார். ஏன் தம் கடிதங்கட்கு பதில் எழுதவில்லை எனக் கேட்டார். 1 மில்லியன் டாலருக்குக் குறைந்த கடிதங்களுக்கு - 'அன்றைய நிலவரத்தில் 2 கோடி ரூபாய்' - பதில் எழுதினால் எங்களுக்குக் கட்டுப்படியாகாதென்றனர்.

வேலை பெருகும்பொழுது நம் அடிப்படையும் பெருக வேண்டும்.

உலகம் முன்னேறுகிறது. இனிக் குடும்பம் அடிப்படையாக இருக்க முடியாது. அதைவிடப் பெரிய அடிப்படை வேண்டும். அதுவே இனி எதிர்காலத்திற்குரிய இலட்சியம்.

ஆன்மா வளர வேண்டும். நாட்டின் ஆன்மா வளர வேண்டும். Universal soul பிரபஞ்சத்தின் ஆன்மா வளர வேண்டும். அதனால் பழைய அடிப்படையான குடும்பம் இனிப் பயன்படாது. இனி உலகில் குடும்பத்திற்கு எதிர்காலமில்லை. நாம் வேலை செய்யுமிடம் - ஆபீஸ் - குடியிருக்குமிடம் - neighbourhood - குடும்பத்திற்குப் பதிலாக நமக்கு முக்கியமாக வேண்டும். அதற்கே எதிர்காலமுண்டு.

சத்திய ஜீவன் பிறந்தால் அவனுடலில் ஜீரண உறுப்புகள், இதயம், நுரையீரல் போன்றவையிருக்கா. அதற்குப் பதிலாக அவ்வுறுப்புகட்குரிய சூட்சுமச் சக்கரங்கள் - subtle centres - இருக்கும் என்கிறார் அன்னை.



- ❖ செயல் நிலை உயர்ந்தால், அடிப்படை பெருக வேண்டும்.
- ❖ பணம் செலாவணி அதிகமானால் சில்லரை போய் நோட்டு வரும், சிறிய நோட்டு மறைந்து, பெரிய நோட்டு வரும்.
- ❖ பள்ளி சிறியதாக இருக்கும்பொழுது, MLA விழாவுக்கு வருகிறார். பள்ளி பிரபலமாகி வளர்ந்தால், கல்லூரி, பல்கலைக்கழகமென மாறினால் விழாவுக்கு பெருந்தலைவர்கள் வருவது அவசியம்.
- ❖ பீடம் உயர்ந்து அகன்றால், அகன்று உயர்ந்தால், சிகரம் உயரும்.
- ❖ தாழ்த்தப்பட்டோரை உயர்த்தும் நாடு, விரைவாக முன்னேறும்.
- ❖ சிறு விஷயங்களைச் சிறப்பாகச் செய்யும் ஸ்தாபனம் பிரபலமானது.
- ❖ ஸ்தாபனம் பிரபலமானால், சிறு விஷயங்களையும் பெருவிஷயம்போல் கவனிக்க வேண்டும்.

❋ ❋ ❋

**713) சரணாகதியை அளவுக்கு மீறிச் செய்ய முடியாது. ஏனெனில் உள்ளிருந்து எழும் சரணாகதியின் வீச்சு வளர்ந்தபடியிருக்கும், முயற்சி முடியும்பொழுது அதுவும் முடிகிறது.**

***அளவை மீறமுடியாத அமைப்புள்ளது சரணாகதி.***

பகவானுடைய சிறப்புகள் பல. அவற்றை நாம் அறியோம். அன்னை சொல்வதால்தான் அவை நமக்குத் தெரியவரும். தெரிந்தாலும் சில புரியும், மற்றது புரியாது. அவற்றுள் ஒன்று சரணாகதி. ஸ்ரீ அரவிந்தர் சரணாகதியை ஒரு யோக முறையாகக் கண்டுபிடித்தது பெரிய காரியம் என்றார் அன்னை.

பக்தர்களும், சாதகர்களும் சரணாகதி எனில் மனிதன்

இறைவனைச் சரண் அடைவது எனப் புரிந்து கொள்கிறார்கள். மனிதனால் சரணடைய முடியாது. ஜீவாத்மா பரமாத்மாவுக்கு சரண் அடைவதே சரணாகதி என பகவான் தெளிவாகக் கூறுகிறார். ஜீவாத்மாவைக் கண்டவன் ஜீவன் முக்தன். ஜீவன் முக்தனாலேயே சரணாகதியை மேற்கொள்ள முடியுமானால், மற்றவர் நிலை என்ன? மனத்தால் செயல்படுபவன் மனிதன். மனிதன் சரணாகதியை மேற்கொண்டால், மனிதன் மனத்தைச் சரண் செய்ய வேண்டும். இது முடியாது. கோபம், ஆசை, பயம், பிராணனைச் சேர்ந்தன. கோபத்தை அடக்க, ஆசையை வெல்ல, பயத்தைப் போக்க பிராணனால் முடியாது. ஒரு கரணம் தன்னைத் தான் அடக்கும் திறனுடையதன்று. மனம் உயர்ந்த கரணம். மனத்தால் கோபத்தை அடக்க முடியும். என்னை மீறி கோபம் எழுந்தது. பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொண்டேன் என்றால் பிராணனை மனத்தால் அடக்க சிரமப்பட்டோம் எனப் பொருள்.

மனத்தை மனமே அடக்க முடியாது. சரண் செய்ய முடியாது. மனத்தை ஆன்மா அடக்கும், சரண் செய்யும். எனவே ஆன்மாவை - ஜீவாத்மாவை - உணர்ந்தவனே சரணாகதியை மேற்கொள்ள முடியும். ஞானயோகத்தின் முடிவான சித்தி, பூரணயோகத்தில் முதல் சித்தியாகும். பகவான் சொல்வது அது அன்று. ஜீவாத்மாவைக் கண்டு, பிறகு சரணாகதியை மேற்கொள்ளும்படி பகவான் சொல்லவில்லை. *சமர்ப்பணத்தை ஏற்று ஆசையை அழித்து, அகந்தையைக் கரைத்து, சமர்ப்பணத்தை சரணாகதியாக மாற்றச் சொல்கிறார்.* இது எல்லாச் சாதகர்களாலும் முடியக் கூடியது. ஆசை விலகி பிராணமயப் புருஷன் - ஆன்மா - வெளிவந்தால் சைத்தியப் புருஷன் சரணாகதியை மேற்கொள்வான். முறை எளியது, எளிதில் புரிந்து கொள்ளக்கூடியது. ஆசையையும், அகந்தையையும் அழிப்பது சிரமம். அதை ஏற்பவன் சாதகன்.



அகந்தை அழியும்பொழுது, சைத்தியம் வெளிவரும். அது சரணாகதியின் பாங்கு, இதை அதிகமாகச் செய்தால் அகந்தை முழுவதுமாகக் கரைந்த நிலையில் சைத்தியம் வெளிவரும். அகந்தை கரைந்த பின், சைத்தியம் சரணாகதியை மேற்கொள்ளும். அகந்தை உள்ளவரை மனித முயற்சி. அது முடிந்தால் முயற்சி முடிகிறது. ஆன்மீகத்தில் போலி வேஷம் போடலாம். ஜடாமுடியும், காவியும் மட்டும் அணிந்து ஏமாற்றலாம். ஆனால் போலியாக சத்திய ஜீவன் பெற்றதாக நடிக்க முடியாது என்கிறார் அன்னை போலிக்கு இடம் அளிக்காதது சத்திய ஜீவியம். Overdoing அதிகமாகச் செய்ய முடியாதது சரணாகதி.

- சரணாகதி முடியுமிடத்தில் ஆன்மா எழுவதால் overdoing அதிகமாகச் செய்வது முடியாது.
- சத்திய ஜீவியத்திற்கு வாழ்வு கட்டுப்பட்டதால், அதைப் பெற்றதாக நடிக்க முடியாது.

அளவு கடந்து செயல்படுவது overdoing திறமைக் குறைவுக்குரியது. திறமை அதிகமாக இருக்கும்பொழுது, அது தேவைப்படாது. புதுப்பணம் வந்தால், திருமணம் ஆடம்பரமாகும், கழுத்தில் 300 பவுன் நகையிருக்கும். காது குத்துவதற்குத் திருமணம் போல் விமரிசை எழும்.

பெரிய விஷயங்களை அளவு கடந்து கடைப்பிடிக்க முடியாது. அடக்கம், பக்குவம், பவித்திரம், பக்தி, தூய்மை, கற்பு, நட்பு, விஸ்வாசம், சிறப்பு போன்றவை அமைதியாக இருக்கும். சரணாகதி அவ்வரிசையில் சிறந்தது. அதை அளவு கடந்து பின்பற்ற முடியாது.

அளவு கடந்து செயல்படுவது முயற்சி. முயற்சி அகந்தைக்கு உரியது. பெரிய அம்சங்கள் முயன்று பெறுவதன்று. இயல்பாக இருப்பவை பெரியவை. முயன்று பெறுபவை சிறியவை. ஆரம்பத்தில்

சமர்ப்பணம். முடிவில் சரணாகதி. இவற்றிற்கு முயற்சி தேவை. பெருமுயற்சியால் சாதிக்கக் கூடியவை இவை. சாதித்தபின், முயற்சி போல் இயல்பாக அமைதல் நன்று.

- ❖ அளவு கடந்து (overdoing) செயல்படுதல் முயற்சியின் தன்மை.
- ❖ முயற்சியிருந்தால் அகந்தை உயிரோடிருக்கிறது எனப் பொருள்.
- ❖ அகந்தை சிறியது (finite).
- ❖ அன்னை பெரியது (infinite).
- ❖ சரணாகதி, அகந்தை விட்டகன்று, அன்னையை அடையும் முறை.
- ❖ பெருவெற்றிகளை பறையறைவிப்பதில்லை என்கிறார் அன்னை.

எதையும் அளவுகடந்து செய்யக்கூடாது என்பது நல்ல கொள்கை. அதை நிதானம் என்கிறோம். அளவு கடந்த நிதானம் வேண்டும் என்று சிறிய உள்ளம் விழையும்.

- ❖ வாழ்வு பெரியது, மனிதன் சிறியவன்.
- ❖ பெரிய வாழ்வைச் சிறியதாக மாற்றுவது தெய்வீக வாழ்வு.
- ❖ அதன் கருவி சரணாகதி.
- ❖ அதற்குரிய நல்ல முறை அளவுகடந்த நிலையை மனம் நாடாதது.
- ❖ பொறுமை, நிதானம், பக்குவம் சரணாகதியைச் சேர்ந்தன.
- ❖ அவசரப்பட்டவன் பொறுமையை நாடினால், அன்னை அவனை நாடுவதைக் காணலாம்.
- ❖ அன்னை நாடுவதை வாழ்வில் அதிர்ஷ்டம் என்கிறோம்.
- ❖ அன்னை நம்மை நாடுவதை ஆன்மீகத்தில் அருள் என்கிறோம்.
- ❖ அருளைக் கடந்த நிலை பேரருள்.



- ❖ பேரருள் காத்திருக்கும்பொழுது, அளவு கடந்து செயல்பட மறுப்பது சரி.

❋ ❋ ❋

**714) ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு அடுத்த நிகழ்ச்சியைப் புரிந்து கொள்ள முயல்வது மடமை, அறியாமை, அறிவீனம். முதியவர்கள் தங்கள் இளமைப் பருவத்தைக் கொண்டு இளைஞர்களைப் புரிந்து கொள்ள முயல்கின்றனர்.**

***காலம் மாறினால் கணக்கு தப்பாகும்.***

இந்து மதத்தவர் அடுத்த மதத்தில் சேர்ந்தபின் அவர்கள் கோயிலுக்கு தேங்காய், பழம், புஷ்பம், கற்பூரம் வாங்கிப் போவதில்லை. அப்படிச் செய்வது அறிவுடைமையில்லை. தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு என்பதால் ஒரு நாட்டு மொழியை நாம் அடுத்த நாட்டில் பேசுவதில்லை. காலம் மாறினால் பழக்கம் மாறும். இடம் மாறினால் பண்பு மாறும். நாடு மாறினால் பழக்கம் மாறும். முதியவர் இளைஞரைத் தம் இளம்பிராயப்படி கணித்தாலும், இளைஞர் வயோதிகரை இன்றைய கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள முயன்றாலும், அவர்கள் கணக்கு தவறாகும்.

வயதானவர்கள், சிறுவர்கள், இளைஞர்களைப் பற்றிச் சொல்லும் குறைகள் ஏராளம். அவற்றுள் ஒரு சிறு பகுதி மேற்சொன்ன படியிருக்கும். 40, 50, 60, 70 வயதானவர்களுடைய உடை, முடியலங்காரம் ஒருவரிடமிருந்து மற்றவர்க்கு மாறுபட்டிருக்கும். சற்று யோசனை செய்தால், அல்லது அவர்களை விசாரித்தால், அல்லது வயதால் உங்களுக்கு இவர்கள் சிறுவர்களாக இருந்தபொழுது வந்த புது பாஷன் நினைவிருந்தால், ஒவ்வொருவரும் அவர்கள் காலத்துப்

பாஷனை ஏற்றுக் கொண்டு, இன்றுவரை மாற்றாமல் பின்பற்றுகிறார்கள் என்பது தெரியவரும். தாம் சிறுவயதில் ஏற்றுக் கொண்டதை மாற்ற முடியாதவர்கள், இன்று இளைஞர்கள் இன்றைய பாணியை ஏற்றுக் கொள்வதில் குறை காண்பது சரியில்லை என்பதை உணர்ந்தால் பல குடும்பங்களில் இத்தலைப்பால் ஏற்படும் சச்சரவு மறையும்.

குடுமியும் பூணூலும் போனபின் என்ன இருக்கிறது என்று அன்று புலம்பிய குடும்பங்களில் இன்று குழந்தைக்கு கிராப் வெட்டுவது முறையாகிவிட்டது.

பேண்ட் போட்டுக் கொண்டு எப்படி கோவிலுக்குப் போவது என்பது மாறிவிட்டது. மனம் ஒத்து வரவில்லை எனில் ரத்து செய்துவிட்டு வேறு திருமணம் செய்வது சரி என்று பேசுவது வழக்கமாகிவிட்டது.

பெருந்தொகைக்கு செக் வாங்கமாட்டேன் என்று மறுத்தவர், இன்று பணம் வேண்டாம், செக் வேண்டும் என்று கேட்கிறார்கள்.

நம் வீட்டில் பணம் பத்திரமாக இருப்பதை விட்டு ஏன் வேறிடத்தில் அதை வைப்பது என்று பாங்கை நம்பாதவர்கள் கேட்டார்கள்.

ஒரு தொழில் செய் என்றால் 'அதெல்லாம் எனக்குத் தேவை இல்லை' என்றவர் தம்பி ஏதாவது ஒரு நல்ல project தொழில் சொல்லுங்கள் என்று கேட்கிறார்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் பிள்ளைகள் எதிர்க்கட்சியான காங்கிரஸில் சேர்ந்தனர். காங்கிரஸ் தலைவர்கள் பிள்ளைகள் கம்யூனிஸ்ட் கட்சி, DMKஇல் சேர்ந்தனர். வ.உ.சி.யின் பேரன் திமுக பிரச்சாரகராக இருப்பதாகச் சொன்னார். காங்கிரஸ் முனிசிபல்



சேர்மன் மருமகன் திமுக எம்.எல்.ஏ.வாக நின்ற பொழுது அவர், 'இதையும் ஒரு காங்கிரஸாக ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்றார்.

5½ வயதிற்கு முன் குழந்தைக்குப் பாடம் சொல்லிக் குடுப்பது சரியில்லை என்பது அன்றைய psychology மனோதத்துவம். மூன்று மாதத்தில் குழந்தை எளிதில் கற்றுக் கொள்ளும் என்பது இன்று கண்டுபிடித்தது.

பிறர் கண்ணோட்டத்திலும், காலத்தை ஒட்டிய நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள முயல்வதில் தவறு வாராது. உள்ளதை உள்ளபடி அறிவது அறிவு. நம் சந்தர்ப்பம், பிறர் சந்தர்ப்பத்திலிருந்து மாறும். அடுத்தவரைப் புரிந்து கொள்ள அவர் கண்ணோட்டத்தில் சிந்திக்க வேண்டும்.

இன்று முதியவர்கள் இளைஞர்கள் போக்குச் சரியில்லை என்கிறார்கள். சற்று யோசனை செய்தால் அதன் பகுதிகள் பல. 1. முதியவர்கள் பழக்கப்படி இளைஞர்கள் சரியில்லை என்பது முதற் பகுதி. 2. சரியில்லை, தவறு தவறுதான் என்பது அடுத்த பகுதி. 3. இளமையில் சரியில்லாதவர் பிறகு சரியாகிவிடுவதுண்டு.

1. இன்று 60 அல்லது 70 வயதானவர் இளைஞர்கள் போக்குச் சரியில்லை என்றால், தம் 10, 15ஆம் வயதைச் சிந்தித்துப் பார்த்தால், அன்றைய முதியவர்கள் கண்ணோட்டத்தில் அவர் எவ்வளவு சரியாக இருந்தார் எனக் கருதினால், அன்று அவரிருந்ததுபோல், இன்றைய இளைஞர்கள் இருக்கிறார்கள் என்பது தெரியும்.

2. எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் மறுக்க முடியாத தவறுகள் உண்டு. காலம் மாறும் நேரம், இத்தவறுகளை மறைவாகச் செய்ய முனைதல் மனித இயல்பு. அவர்கள் சாதுர்யமான சாமர்த்தியசாலிகள். அவர்களை நாம் முந்தைய நிலையிலிருந்து

பிரித்துப் பார்க்க வேண்டும்.

3. இளமையின் துடிப்புக்குச் சரி, தவறு புரியாது. ஆசை சரி என நினைக்கும், பண்பான குடும்பம் இத்துடிப்புக்கு இடம் தாராது. சாதாரணக் குடும்பத்து நல்ல இளைஞர்கள் ஆடி, ஓடி ஓய்வது வழக்கம். 60 வருஷத்திற்கு முன்னும் அந்த ஆட்டமிருந்தது. என்றுமிருந்தது. இன்றும் உண்டு. இதைத் தவறு என நினைப்பது தவறு.

அன்றைய ஆட்டம் சிறியது. இன்று அதிகமாக இருக்கிறது. சிறியதும் பெரியதும் ஓய வேண்டியதுதான். நமக்கு அது ஓயும்வரை பொறுமை வேண்டும்.

இந்த மூன்று நிலைகட்கும் பொதுவானதென்ன? காலத்தாலும், வயதாலும், சரி, தவறு என்பவை நிர்ணயிக்கப்படுவதில்லை. என்றும், எக்காலத்திற்கும், சரி என்பதுண்டு, தவறு என்பதுண்டு. அந்தப் பாகுபாடு நமக்கில்லை. நாம் காலத்தை ஒட்டிப் போகிறோம். காலத்திற்குரிய மொழியைப் பேசுகிறோம். Being, Becoming, Being of the Becoming, வாழ்வு, துறவறம், இல்லறத்தில் துறவறம் என்ற மூன்று நிலைகளில் மனிதன் வாழ்வை ஏற்கிறான். ரிஷி துறவறத்தை நாடி இல்லறத்தை உதறுகிறார். இல்லறத்தின் துறவறம் என்பது வாழ்வனைத்தும் யோகமாகும். அது ஸ்ரீ அரவிந்தம். வாழ்வின் எல்லா அம்சங்களிலும் ஸ்ரீ அரவிந்தம் கூறும் மனப்பான்மையிருந்தால், இத்தவறு வாராது. தாயன்பு அத்தகையது. அங்கு தவறு எழுவதில்லை. ஊர் மெச்சிக் கொள்ள தாய் மகனைப் பாராட்டுவது சிறுமை. அதில் எல்லாத் தவறுகளும் எழும்.

**தாயன்பு என்பது கனிவு.**
**ஆசை கடுமையில் முடியும்.**

❋ ❋ ❋



**715) சமூகப் பழக்க வழக்கங்களை மாற்றுவதுபோல், மனம் ஏற்ற பழக்கங்களை மாற்ற முடியாது. உடையை மாற்றுவதுபோல், நல்லது கெட்டது, உயர்ந்தது தாழ்ந்தது என்பதை மாற்ற முடியாது.**

*சமூகப் பண்புகள் மனத்திற்குரியவை. எளிதாக மாற்ற முடியாது.*
*மனம் தன் பண்புகளை மாற்ற அனுமதிக்காது.*

மனிதனுக்கு ஒன்றை கற்றுக் கொள்வது சிரமம். கற்றுக் கொண்டால் அதைப் பின்பற்றுவது சிரமம். பின்பற்றினால் தொடர்ந்தும் பின்பற்றுவது சிரமம். தொடர்ந்து பின்பற்றும் விஷயங்கள் மனத்தில் ஊறிப் பதிந்து விடும். மனம் கற்றதை உணர்வு ஏற்கும். உணர்வு ஏற்றதை உடல் ஏற்கும். ஏற்றதின் மீது பாசம், பற்று ஏற்படும். அதை விரும்பி நாடுவோம். முடிவாக அதனுடன் இரண்டறக் கலந்த நிலையில், அது நம் பண்பாகும். பண்பானபின் அதை விட முடியாது. மாற்ற முடியாது. மாற்ற முயன்றால் மனம் இடம் தாராது. இதுபோல் நாம் ஏற்றவை ஏராளம். அவற்றுள் நல்லவை அதிகம். முதல் நிலையில் அவை சமூகப் பழக்கவழக்கங்களாகும். அடுத்த நிலையில் மனம் ஏற்ற பழக்கங்களாகும். அவற்றுள் சிலவற்றைக் குறிக்கிறேன்.

- ❖ நல்ல உடையில்லாமல் வெளியில் போக மனம் வாராது.
- ❖ தெரியாதவர்களிடம் உதவி கேட்க முடியாது.
- ❖ உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்குப் போகாமலிருக்க முடியாது.
- ❖ வாங்கிய பொருளைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்ல முடியாது.
- ❖ கடமைகளை நிறைவேற்ற முடியாது எனப் பேசுவதில்லை.
- ❖ நாலு பேர் முன்னிலையில் நம்மை உயர்வாகப் பேச மனம் வாராது.
- ❖ வரிசையாக நிற்பவர்களை மீறி முதலில் போக வெட்கப்படுவோம்.

இவை போன்றவை சமூகத்திற்குரிய பழக்கம். அவற்றை

மாற்றுவது சிரமம். நாலு பேர் மாறினால், மாறுவது சிரமமன்று. எவரும் மாறாதபொழுது, மாறுவது எளிதன்று. இதற்கடுத்த ஆழ்ந்த நிலை மனம் ஏற்றுக் கொண்டவை (psychological). அவற்றை மாற்றுவதோ, விட்டு விடுவதோ இதைவிடச் சிரமம். அவற்றுள் சில.

- ❖ ஒர் ஆபீசில் சிலர் காசு வாங்கினால், சுத்தமானவனால் அந்த எண்ணத்தையும் நினைக்க முடியாது.
- ❖ உடன் பிறந்தவர்களோடு பணவிஷயத்தில் நமக்கு ஆதாயமாக நினைக்க முடியாது.
- ❖ பரம்பரைச் சைவனால், மாமிசம் சாப்பிட முடியாது.
- ❖ வயதில் சிறியவர்களுடைய அந்தஸ்தால் அவர்களுக்குப் பணிய மனம் இடம் கொடுக்காது.
- ❖ நம் ஊர், குடும்பம், ஜாதி, தொழில் ஆகியவற்றைத் தவறாகவோ, குறைவாகவோ நினைக்க முடிவதில்லை.

இவைபோன்ற பழக்கங்களை மாற்ற வேண்டிய அவசியம், நேரம் வந்தாலும் மாற்ற முடியாமல் நாம் திணறுவதுண்டு. பூரண யோகத்தை மேற்கொள்ள இவை மாறுவது இன்றியமையாதவை. சுபாவத்தால் ஏற்பட்ட பழக்கங்களை மாற்றுவது இதைவிடக் கடினம். சுபாவத்தை மாற்ற முன்வருபவர்க்கே பூரணயோகம் பலிக்கும். அவசரம், நிதானம், பேராசை, உதவி மனப்பான்மை, பொறுமை, தெளிவாகச் செயல்படுதல் போன்றவை சுபாவத்திற்குரியவை. அவசரத்தைப் பொறுமையாக அவசியம் மாற்ற வேண்டும். வேகமாகச் செயல்பட வேண்டிய இடத்தில் பொறுமைசாலி, பொறுமையைக் கைவிட்டு விரைவாகச் செயல்படுவது அவசியம். இவை மிகவும் கடினமானவை. பழக்கங்கள் பல வகையின. அவை வாழ்வுக்கும், நாம் வளர்ந்த கலாச்சாரத்திற்கும் உரியவை. ஆன்மாவுக்கோ, மனத்திற்கோ, நம் உணர்வுக்கோ உரியவையில்லை. உடலையும் அவை சேரா. என்றாலும்



அவை நம் கலாச்சாரத்தின் மூலம் நம் ஆன்மாவை வெளிப்படுத்துபவை. ஒரு முறை நாம் அவற்றை ஏற்றுக் கொண்டால் மாற்றுவது சிரமம். சமூகம் மாறினால் மாறலாம். அதுவும் 80% மக்களால் முடியும். மற்றவர்களால் முடியாது. ஆன்மீகத்தை வாழ்வில் ஏற்றால், அவற்றிற்கு அர்த்தமில்லை. அன்னை வாழ்வுக்கு அவை புறம்பானவை. தடையானவை. அவசியம் நேர்ந்தபொழுது அவற்றை மாற்ற நாம் முன்வர வேண்டும் என அன்னை வலியுறுத்திக் கூறுகிறார். அவற்றை மாற்ற முடியாதவர்க்கு அன்னையில்லை, யோக வாழ்வு என்ற அன்னை வாழ்வில்லை. அது போன்றவை,

1. உடை
2. உணவுப் பழக்கம்
3. மொழி
4. நாம் இன்று வணங்கும் தெய்வம்
5. திருமணம், வாழ்வு, சாவுக்குரிய கலாச்சாரப் பழக்கங்கள்
6. திருமணம்
7. பண்பு நாம் அறியும் பழக்கங்கள்

7ஆம் தலைப்பு, நட்பு, உறவு, விஸ்வாசம், நாணயம், கற்பு போன்றவற்றைக் குறிக்கும். உடை, உணவு பழக்கங்களை மாற்றுவது போல் மொழியை மாற்றுவது சுலபமன்று. 800 ஆண்டுகட்கு முன் தமிழ்நாடு வந்த சௌராஷ்டர்களும், 500 ஆண்டுகளாக நம்முடன் வாழும் தெலுங்கர், கன்னடியர்களும் வீட்டில் அவர்கள் பாஷையே பேசுகிறார்கள். அதை மறந்தால் துரோகம் செய்ததுபோல் நினைக்கின்றார்கள். நாம் இதுவரை வணங்கிய தெய்வத்தை மாற்றுவது மேலும் கடினம். அதைச் செய்தவர்களும் பண்புகளை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் வந்தால், அதைத் தவறாகக் கருதுகின்றனர். முடியாது எனக் காண்பவர் பலர். 1960இல் பள்ளி

ஆசிரியர்கட்கு சீருடை நிர்ணயிக்க வேண்டும். Pant, closed coatஉம் போட வேண்டும் என்று பேசினர். B.A., B.Ed. படித்து பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்தவர் கிராமவாசி. வேஷ்டி கட்டுபவர். "இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால் நான் வேலையை ராஜினாமா செய்துவிடுவேன்" என்றார். வெளிநாட்டுக்குப் போய் புதிய உணவை ஏற்க முடியாமல், உடனே தாய்நாடு திரும்பியவர் பலர். வேறு மதத்தைத் தழுவிய பின்னும், தாலி, சுபமுகூர்த்தம், ஜாதகத்தை விட முடியாதவருண்டு. கடைசிக் காலத்தில் வறுமையால் திரு. வி.க. வாடியபொழுது அவர் பெற்ற லட்ச ரூபாய் நன்கொடையை அவரால் ஏற்க முடியவில்லை. மறுத்தார். பிறருதவியால் வாழ்வது தவறு என்ற பண்பை மாற்றி நாட்டில் புலமை பெற்றவரைச் செல்வர் ஆதரிப்பது முறை என திரு. வி.க.வால் ஏற்க முடியவில்லை. வறுமையில் இறந்தார். மறுமணத்தை சமூகம் ஏற்க படும்பாட்டை நாம் அறிவோம். கருத்தை ஏற்றாலும், செயலை ஏற்க மனம் இசையாதவர் பலர்.

- ❖ ஆன்மீக வாழ்வுக்கு நாடு, மொழி, பண்பு, இன வேறுபாடில்லை.
- ❖ அவற்றைக் கடக்க முடியாதவருக்கு ஆன்மீக வாழ்வு எனும் அன்னை வாழ்வு இல்லை.

முக்கியமாகச் சைவ உணவை ஆன்மீகம் என நாம் கருதுகிறோம். அப்படிப்பட்டவரை அன்னை அசைவ உணவை உட்கொள்ளும்படிச் சொல்வார். தாமே கோழி முட்டையைக் கொடுத்து சாப்பிடச் சொல்வார். ஏற்றுச் சாப்பிட்டவர் பலர். ஏற்கமுடியாதவர் பலர்.

❋ ❋ ❋

தொடரும்....



# இம்மாதச் செய்தி

**மனைவியைத் திருப்தி செய்தால் மனம் நிறையும்.**

என் குழந்தை, என் மனைவி, என் வாழ்வு ஆகியவை முடிவாக நானே சிருஷ்டித்தவை. நான் வாழ்வின் பிடியிலிருக்கலாம், வாழ்வு என் பிடியிலிருக்கலாம் என்ற முடிவு என்னுடையது. சுயநலம் வாழ்வின் பிடியில் என்னைச் சேர்க்கும். பரநலம் என் பிடியில் வாழ்வைக் கொணரும். பரநலம் மனைவியைத் திருப்தி செய்யும். அது என் மனத்தை நிரப்பும். The selfless human choice is really the Divine choice.

❋ ❋ ❋

**ஜீவிய மணி**

சொல்லுக்கு ஞானமில்லை.

"ஸ்ரீ அரவிந்தம்"

# லைப் டிவைன்

கர்மயோகி

## X. Conscious Force

This is a revolutionary view. Page No. 88

This view changes the meaning of the world itself. Para No.19

It is necessary.

Now consciousness is synonymous with mentality.

It is a self-aware force of existence.

Mentality is its middle term.

Below mentality it is vital and physical.

They are subconscient to us now.

Above it rises to the supramental.

It is superconscient to us.

But in all it is one and the same thing.

It organises itself differently.

This is the Indian conception of Chit.

Chit is energy and creates the worlds.

We arrive at unity from the other end.

Materialistic Science perceives it.

It finds Mind cannot be another force than Matter.

It asserts that finding.

To it, Mind must be a development of Matter.



## 10. சித் - சக்தி

இது புரட்சிகரமான கருத்து.

உலகைப் பற்றிய நம் கருத்தை இக்கண்ணோட்டம் மாற்றிவிடும்.

இது அவசியம்.

மனப்பான்மையும் ஜீவியமும் ஒன்றே.

சத் புருஷனின் சக்தி தன்னையறிந்த நிலையது.

மனப்பான்மை நடுவில் உள்ள சொல்.

மனப்பான்மைக்குக் கீழே உணர்வும், உடலும் உண்டு.

நமக்கு அவை கீழ்ப்பட்டவை, நம் உணர்வைக் கடந்தவை.

மேலே சத்தியஜீவியம் உண்டு.

சத்தியஜீவியம் நம் அறிவு நிலைக்கு அப்பாற்பட்டது.

எப்படியாயினும், இவையனைத்தும் ஒன்றே.

வெவ்வேறு வகையாகத் தோற்றம் தெரிகிறது.

இதுவே சித் என்பது இந்திய யோக மரபு.

சித் என்பது சக்தி, உலகைச் சிருஷ்டிக்கின்ற சக்தி.

அடுத்த முனையில் நாம் ஐக்கியத்தைக் காண்கிறோம்.

விஞ்ஞானம் அதைக் கண்டு கொண்டது.

மனம், ஜடத்திலிருந்து வேறுபட்டதில்லை என விஞ்ஞானம் கூறுகிறது.

தான் கண்டதை விஞ்ஞானம் வலியுறுத்துகிறது.

மனம் ஜடத்தின் அடுத்த நிலை என விஞ்ஞானம் கூறுகிறது.

It says, it is the outcome of material energy.
Indian thought has reached the depths.
Its affirmation is different.
To it, Mind and Matter are of the same energy.
They are only different grades.
Both are of one conscious Force and Existence.
They are of different organisations.

We describe here Consciousness as Force. Page No.88
Is this a just description for this Force. Para No.20
Do we have a right to it?
Consciousness has three attributes.
They are intelligence, purposefulness, self-knowledge.
They may take different forms from our mentality.
Even from this point of view, we are right.
Everything supports our description.
Nothing contradicts our position.
Our idea is a universal conscious Force.
For instance, let us consider the animal.
Operations are perfectly purposeful.
They are even exact.
The knowledge here is scientifically minute.
They are quite beyond animal mentality.
Man himself can acquire only by long culture.
Equally long education is needed for him.



மனம் ஜடத்திலிருந்து எழுவதாகக் கூறுகிறது.
இந்திய மரபு ஆழத்தைத் தொட்டது.
அது கூறுவது வேறு.
மனமும், ஜடமும் ஒன்றே என்பது இந்திய ரிஷிகள் கண்டது.
அவை வெவ்வேறு நிலைகட்குரியன.
ஆனால் இரண்டும் ஒரு சத் புருஷனுடைய ஜீவிய சக்தியாகும்.
அவற்றின் அடிப்படைக் கட்டுக்கோப்பான அமைப்புகள் வேறு.

இங்கு ஜீவியத்தை சக்தி என்கிறோம்.
இது சரியான விளக்கமா?
இப்படிக் கூறும் உரிமை நமக்குண்டா?
ஜீவியத்தின் அம்சங்கள் மூன்று.
புத்தி, நோக்கம், விழிப்புணர்வு ஆகிய மூன்றாகும்.
நம் மனப்பான்மையிலிருந்து மாறிய தோற்றங்களை அவை பெறலாம்.
இப்படிப் பார்த்தாலும், நாம் செய்வது சரி.
நம் விளக்கத்திற்கு அனைத்தும் ஆதரவு தரும்.
நாம் கூறுவதை மறுப்பவர் எவருமிலர்.
பிரபஞ்சத்தின் ஜீவிய சக்தி என்பதே நம் தெளிவு.
விலங்கை நினைத்துப் பார்ப்போம்.
விலங்கினத்தின் செயல்களுக்கு நோக்கமுண்டு.
அவை துல்லியமானவை.
அவை பெற்றுள்ள அறிவு விஞ்ஞான நுணுக்கத்திற்குரியது.
விலங்கின் அறிவுக்கு எட்டமுடியாத நிலை.
மனிதன் இத்திறனைப் பெற நெடுநாள் பயில வேண்டும்.
கல்வியின் மூலம் பயின்றாலும் பயிற்சி அதிக நாள் தேவை.

When he uses them, he will be less exact.
He will be much less sure in his speed.
Here is a proof.
There is a general fact.
It proves the conscious Force at work.
It is in the animal and the insect.
This exceeds the greatest known intelligence.
It is more purposeful.
It is more intelligent.
It is more aware of its intention.
It takes care of its ends, means and conditions.
No such mentality is yet manifested on earth.
Inanimate Nature operates this way.
Here is a characteristic.
It pervades the operations.
It is a supreme hidden intelligence.
It is 'hidden in the modes of its own working'.

*...contd.*

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

புத்திசாலித்தனம் புரிந்து கொள்ள, அறிவுப்பூர்வமான விளக்கமளிக்கிறோம்.



**அப்படிப் பயின்ற பின்னும் மனிதனுக்கு அது தெளிவாக வாராது.**
**அவனது வேகமும் குறையும்.**
**ஒரு நிரூபணம் உண்டு.**
**ஒரு பொது உண்மையுண்டு.**
**அது ஜீவியசக்தி செயல்படுவதைக் காட்டும்.**
**அது விலங்கிலும், பூச்சிகளிலும் உண்டு.**
**இதுவரை நாமறிந்த புத்தியைக் கடந்த திறன் அது.**
**அதற்குச் சரியான நோக்கம் உண்டு.**
**அதன் புத்திசாலித்தனம் அதிகம்.**
**இயற்கையின் இலட்சியத்தை அது அதிகமாக அறியும்.**
**நிலைமை, முறை, முடிவுகளை கவனமாகப் பாதுகாக்கிறது.**
**அது போன்ற மனப்பான்மை இதுவரை உலகில் எழவில்லை.**
**ஜடமான இயற்கை இதுபோல் செயல்படுகிறது.**
**அதன் முத்திரையை இங்குக் காண்போம்.**
**செயல்களை அதன் தன்மை ஊடுருவுகிறது.**
**உன்னதமான ஞானம் மறைந்துள்ள நிலையில் காணப்படும்.**
**"தன் செயலினுள் மறைந்துள்ள ஞானம்" எனக் கூறப்படும்.**

*...தொடரும்*

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சாதிப்பது மனமில்லை; ஆன்மா. அது விருப்பப்பட்டால் எதையும் சாதிக்கும்.

ஆன்மா சாதிக்கும்; ஆன்மாவே சாதனை.

## A love that bore the cross of pain with joy

### வேதனை என்ற சிலுவையை மகிழ்வுடன் ஏற்ற அன்பு

மாந்தரின் பாவத்தைத் தாம் ஏற்று, சிலுவையில் தம்மைத் தியாகம் செய்தார் ஏசுபிரான் என்ற வரி சாவித்ரியில் உள்ளது.

இங்கிலாந்தில் ஸ்ரீ அரவிந்தர் பயின்ற இடங்களில் அவருடைய மார்க்குகளைப் பார்க்க புராணி என்ற சாதகர் போகும் வழியில் கென்யா என்ற ஆப்பிரிக்க நாட்டிற்குப் போயிருந்தார். அயல்நாட்டுப் பிரயாணத்தை மேற்கொண்டவர்க்கு பிரச்சினைகள் தெரியும். அரசாங்கத்துடன் அதிகத் தொடர்புள்ளவர்கட்கும் documents நாம் கொண்டு போகும் தஸ்தாவேஜுகளின் முக்கியத்தைப் பற்றித் தெரியும். புராணிக்கு பாஸ்போர்ட், விசா சரியாக இருந்தாலும், கென்யா ஆபீஸ் அவற்றை ஏற்க மறுத்தது. அவர் காந்தியவாதி, ஆபீசுக்கு எதிரே வெய்யிலில் உட்கார்ந்து சத்தியாக்கிரஹம் செய்தார். அந்த ஆபீஸ் பியூன் அவரிடம் வந்து தன் வீட்டிற்கு வரச் சொன்னான். புராணி, நான் உன் வீட்டிற்கு வந்தால், உனக்குத் தொந்திரவு வரும் என்றார். அவன் “My house is my house அது என் வீடு, எவருக்கும் கேட்க உரிமையில்லை” என்று கூறி அவரை அழைத்தான். ஆபீஸ் மனம் மாறியது. புராணி கவர்னருக்கு எழுதினார். நடந்ததைக் கூறினார். பியூனுடைய பெரிய மனதை வியந்தார். அவனே உண்மையான கிருஸ்துவன் என்றார்.

“சாவித்திரி”யைப் பிரித்து இப்பகுதியைப் படித்து மேற்கூறிய வரிக்கு வந்தார். கவர்னர் நெகிழ்ந்து போனார். எழுந்து வந்து புராணியிடம் தனக்கு அப்புத்தகம் வேண்டும் என்றார்.



குடும்பங்களில் இதுபோல் அன்புடன் தியாகம் செய்யும் நேரம் உண்டு. அதைச் செய்பவரும் உண்டு. தியாகம் செய்தவர், தியாகம் செய்ததால் கீழே போய், பலனைப் பெற்றவர் மேலே வருவார்.

- *தியாகம் செய்யும் மனம் உள்ளவர் அநேகர்.*
- *தியாகத்தைச் செய்தபின் அவருள்ளம் பூரிக்கும்.*
- *பலனைப் பெற்றவர் தம்மைவிட உயர்வதைக் கண்டும் பூரிக்கும் உள்ளம் உண்டு.*
- *பலனைப் பெற்றவர், தியாகம் செய்தவர் கீழே போனதால் கேலி செய்யாமலிருக்கமாட்டார்.*
- *கேலியை ஏற்க மனமுடையவரில்லை.*
- *கேலி கொடுமையானது. அதை மனித இதயம் ஏற்காது.*
- *அக்கொடுமையை சந்தோஷமாக ஏற்றது ஏசுவின் இதயம்.*
- *அந்த சந்தோஷம் எழுவது அன்னையை ஏற்பதற்கு அடையாளம்.*

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வெளித் தொடர்பைப் பத்திலொன்றாக, நூறில் ஒன்றாகக் குறைக்க முன்வந்து, மனத்தால் மாறவில்லை எனில், மீதியிருக்கும் உறவுகள், அர்த்தமற்றவையோ அர்த்தம் உள்ளவையோ, பழைய தீவிரத்தை இருப்பதில் ஏற்படுத்த வல்லது. மொத்தத்தில் நிலைமை மாறாது.

*புறம் அழியும்வரை புத்தி வராது.*

## அன்பர் கடிதம்

அன்னை என்னும் அற்புதத் தெய்வம் என் வாழ்வில் பற்பல நன்மைகளையும் அருட்கொடைகளையும் வழங்கிவருகிறார் என்பதை ஏற்கனவே என்னுடைய முதல் கடிதத்தில் தெரிவித்திருந்தேன். அன்னையின் அருளைப் பெறும் வாய்ப்பாக எனக்குக் கிடைத்த ஆனுபவங்களைத் தொகுத்து எழுதும் விரிவாக்கமே இக்கடிதம்.

அன்னை எனும் அருட்கடல் என் வாழ்வில் முதன்முதலில் செயல்படத் தொடங்கிய நாள் ஓர் அன்னை அன்பரிடமிருந்து Mother photo வாங்கிய நாள் என்றே சொல்லவேண்டும். அதுவும் என் தாயார் மூலம் அன்னை தன் presenceஐ எனக்கு உணர்த்தினார். Photo வாங்கி வீட்டில் வைத்து வணங்கிய அன்றே summer holidayக்காக Trichy, Srirangam சென்றோம். அங்குதான் என்னுடைய parents (no sons, only two daughter) வசித்து வந்தார்கள். அங்குப் போன இரண்டு மூன்று நாட்களிலேயே அம்மாவுக்கு மார்பில் கட்டி இருப்பதை யதேச்சையாகக் கண்டுபிடித்து உடனடியாக அதற்குத் தேவையான check-up, test எல்லாம் எடுத்து அங்கிருந்து பின்னர் CMCக்குக் கூட்டி வந்தோம். Cancer என்று diagnose செய்யப்பட்டவுடன் shockஆகி பின்னர் சற்று தெளிந்து உடனே operation, radiation சிகிச்சை எல்லாம் மேற்கொண்டோம். நான் கட்டியைப் பார்க்க நேர்ந்தபோதே அது III$^{rd}$ stage. இருந்த போதிலும் அதற்குபின் இரண்டு மூன்று ஆபரேஷன்கள் Bombayயில் (அக்கா வீட்டில்) நடந்து அவ்வப்போது தேற்றி, 5 வருடம் இருந்து, recentஆக July மாதம் Bombayஇல் காலமாகி விட்டார். இதை எழுதும் போது மனம் துயரமடைகிறது. இருந்தாலும் அன்னையின்



அருள்தான் அம்மாவின் நோயை எனக்குக் காட்டிக் கொடுத்து, தக்க சமயத்தில் treatment எடுக்கச் செய்து 5 வருடங்கள் அம்மாவை அப்பாவுடன் இருக்கச் செய்தது என்பதை என்னால் என்றும் மறக்க முடியாது. உலகத்துக்கே தாயான ஸ்ரீ அரவிந்த அன்னையின் திருமுகத்தைப் பார்த்துத்தான் என் அம்மா மறைந்த மனக்கஷ்டத்திலிருந்து மீண்டிருக்கிறேன்.

அடுத்து, எங்கள் வாழ்வில் சுபீட்சத்தை வாரி வழங்கிய அன்னையின் கருணையைப் பற்றி நான் அவசியம் சொல்லவேண்டும். சிறு வயதிலிருந்தே இறை நம்பிக்கை மனதில் ஆழமாக வேரூன்றியிருந்தாலும், இறை அருளை நாங்கள் வணங்கிய தெய்வங்கள் மூலமாக உணர்ந்திருந்த போதிலும், திடீர் அதிர்ஷ்டம் luck, lottery இவை எதிலும் எங்களுக்கு நம்பிக்கை இருந்ததில்லை. அது போன்ற luck எல்லாம் எனக்குக் கிடையாது என்று சொல்லிக் கொண்டிருந்தவள் நான். 1997 ஆம் வருடம் ஜனவரி மாதம் 10 ஆந் தேதி ராணிப்பேட்டை Mother-Centre சென்றிருந்தேன். அன்று என் கணவர் பிறந்தநாள். அங்கு ஓர் அன்பர் கையால் அருமையான சிறிய அன்னை photo கிடைக்கப் பெற்றேன். படம் கிடைத்த இரண்டு மாதங்களிலேயே என் கணவர் பெயருக்கு post-office small savings scheme வாயிலாக Rs. Two lakhs பெறுமானமுள்ள Maruti Van ஒன்று பரிசாக (1st prize) கிடைத்தது. அனைவருக்கும் ஆச்சரியம். எங்களுக்கோ மிகுந்த சந்தோஷம். நான் இதுவரை luck பற்றி நினைத்திருந்ததை பொய்யாக்கி Mother எங்களுக்கு அதிர்ஷ்டத்தை வழங்கினார். ஆனால் இது அன்னையால் நடந்தது என்று புரிந்து கொள்ள எனக்குச் சில மாதங்களாயின. அவ்வாறு அன்னையின் மகிமையால்தான் நடக்கிறது என்று புரிந்து கொள்ள வைப்பதற்கு அன்னை மறுபடி மறுபடி பல சம்பவங்களையும், வாய்ப்புகளையும் வழங்கினார். புத்தகங்களில் நீங்கள் எழுதியுள்ளது போல் ஒரு

court case விஷயமும் அன்னையின் செயல்பாட்டை எனக்கு உணர்த்தியது. என் தந்தைக்கு 1985ஆம் வருடம் தஞ்சாவூரில் நடந்த accidentக்கு பல வருடங்களாக compensation கிடைக்காமல் case pendingஇல் இருந்தது. நாங்கள் எல்லோரும் அதை மறந்துவிட்டோம். திடீரென்று court caseஐ எடுத்துக்கொண்டது. அன்னையின் கருணைப் பார்வை அதன்மேல் பதிய, ரூ. 2 லட்சம் தரச் சொல்லி courtஇல் தீர்ப்பளித்து அதை இழுத்தடிக்காமல் கொடுத்தும் விட்டார்கள். இதுவும் நான் அன்னையை வணங்க ஆரம்பித்தபின்தான் நடந்தது.

இப்போது நினைத்தால் அன்னையின் மகிமையும் சிறப்பையும் உணர எனக்குத்தான் awareness குறைவாக இருந்திருக்கிறது என்று தோன்றுகிறது. மற்றுமோர் ஆச்சரியமான திருப்பமும் எங்கள் வாழ்வில் ஏற்பட்டது. என் தாயாரைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். Cancer வந்து இறப்பதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பாக அவருடைய பிறந்த வீட்டிலிருந்து சற்றும் எதிர்பாராத விதமாக Rs.3 லட்சம் தாய் வழிச் சொத்தாக வந்து சேர்ந்தது. இந்தப் பணம் வந்தது அன்னை கொடுத்த ஐஸ்வர்யம் என்று நான் எடுத்துக் கொண்டாலும் அதைவிட இன்னுமொரு விஷயம் இதில் அன்னையின் கருணையை எனக்கு எடுத்துச் சொன்னது மிகவும் சாத்வீகமான நல்ல nature உடைய என் தாயார், தன் கணவருக்காக பிறந்த வீட்டாரோடு 20, 25 வருடங்களாகத் தொடர்பு இல்லாமல் இருந்தார். அப்பாவுக்கும் அவர்களுக்கும் ஏதோ misunderstanding. இருந்தாலும் பெற்ற பாசத்தையும் சகோதரபாசத்தையும் மனதில் பூட்டி வைத்த என் அம்மா எல்லோரையும் பார்க்கம் சந்தர்ப்பத்தை அன்னை ஏற்படுத்திக் கொடுத்தார். அவர்களாகவே வலிய மனமுவந்து வந்து என் தாயாரைப் பார்க்கவேண்டும் என்று கெஞ்சிக் கொண்டதன் பேரில் அப்பாவும் எங்களுக்காக (பெண்களுக்காக)



சம்மதித்து அவர்களைப் பார்க்க அனுமதித்தார். அம்மாவுக்கு இருந்த அந்த மனக்குறையும் நீங்கியது. பிறந்த வீட்டுச் சொத்தாகப் பணமும் கையில் வாங்கி எங்களிடம் கொடுத்துவிட்டுத்தான் அம்மா இறந்தார். பணத்திற்குப் பின் இதிலெல்லாம் அன்னையின் அருள்தான் எனக்குப் பிரத்யட்சமாகத் தெரிந்தது. ஒன்றன்பின் ஒன்றாக அன்னையை அறிந்த 4, 5 வருட காலத்தில் இதுபோல் நடந்தவுடன் இவை எல்லாவற்றிற்கும் அன்னைதான் காரணம் என்று நன்றாகப் புரிந்துகொண்டேன். அன்னைக்கு இவற்றிற்கெல்லாம் நன்றி சொல்லிக் கொண்டேயிருக்கலாம். அதற்கு முடிவோ, எல்லையோ இல்லை.

எனக்கு ஒரு பெண், ஒரு பிள்ளை. பெண்ணின் பெயர் Vidya Sagari. பையனின் பெயர் Dilip Srinivas. பெண்ணிற்கு Mother's graceஆல் போனவருடம் computer science course college Ist rank வாங்கி ஆந்த வருடம் மட்டும் Ist rankக்கு Rs.12,000 scholarship கொடுத்தார்கள். அதற்குபின் Ist rankersக்கு கொடுக்கவில்லை. அதற்கு முன்பும் அவ்வளவு பெரிய தொகை கொடுக்கவில்லை. இது அன்னையின் அருளாலன்றி வேறில்லை. பையன் இந்த வருடம் March 1st XIIth Board Exam (C.B.S.E.) எழுதுகிறான். அவனுடைய resultஐயும் அன்னையிடமே விட்டுவிட்டேன். என் இரு குழந்தைகளின் future, அவர்களுடைய prosperity, சந்தோஷம், ஆரோக்யம் இவைகளுக்கு அன்னையின் அருளையும் தங்களுடைய ஆசீர்வாதத்தையும் வேண்டுகிறேன்.

பொதுவாகவே அன்னையை அறிந்த பிறகு எங்கள் குடும்ப ஆரோக்யம், சுமுகம், சந்தோஷம் இவை முன்பைவிட அதிகரித்துள்ளன. அன்னை தரும் அரவணைப்பில் வாழும் நான் தாங்கள் புத்தகங்களில் குறிப்பிட்டுள்ளதுபோல் அடுத்த

கட்டத்திற்கு வந்துள்ளதாக உணர்கிறேன். தவறுகள், சில சுபாவக் குறைபாடுகள், பலஹீனங்கள் இவைகளைத் திருத்திக் கொள்ள முயன்று செய்து வருகிறேன். I am also trying to follow the sacred practice of surrendering my will and accepting God's will done to me through Mother.

வாழ்வில் நடக்கும் எல்லா விஷயங்களிலும் இறைவனின் திருவுள்ளத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை எனக்கு அருள அன்னையை வேண்டுகிறேன். மறுபடியும் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வாறாகப் பற்பல அரிய நன்மைகளையும் அருட்கொடைகளையும் வழங்கும் அன்னையை வாழ்வில் அறியவும், அவருடைய மகிமையை உணரவும் தங்களுடைய புத்தகங்கள் எனக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சக்தியை விரயம் செய்வது எல்லா நிலைகளுக்கும் உண்டு. உடலில் உணர்வு என்பதுபோல் மனத்திற்கு எண்ணமுண்டு. எதிர்பார்க்கும் எண்ணமும், அவசரமும் அதற்குச் சமமானவை. உடல் உணர்வைக் கட்டுப்படுத்த, எண்ணத்தில் பொறுமையின்மையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அவசரம் அதிக விரயம்.





## மனத்தால் செய்யும் வேலை மதர் செய்யும் வேலை

(வேலூர் தியான மையத்தின் ஐந்தாமாண்டு துவக்க விழாவில் 17.02.02 அன்று திருமதி உஷா ராம்தாஸ் நிகழ்த்திய உரை).

அன்னை வேலையைப் பற்றிப் பேசும்பொழுது, நமக்குப் பிடித்தமான வேலை வேண்டும் எனக் கேட்கக் கூடாது. இருக்கும் வேலையை ஆர்வமாகச் செய்ய வேண்டும் என்கிறார். இப்படிச் செய்யும் வேலை இறைவனுக்கு அர்ப்பணமான வேலை. கடமையாகச் செய்ய வேண்டிய வேலை கசப்பாக இருக்கும். கசப்பான வேலையை ஆர்வமாகச் செய்வதுதான் யோகம் எனில் யோகம் கசப்பானது எனப் புரியும். சொல்வதை மேலெழுந்தவாரியாக எடுத்துக் கொண்டால் கசப்பாக இருக்கும். அதன் தாத்பர்யம் என்ன என்று மனம் புரிந்து கொள்ள முயன்றால், கசப்பு என நாம் அறிவது, கடமையென உணர்ந்தால், கடமையைச் செய்ய ஆர்வமிருப்பதால், மனம் பெறும் தெளிவு, கசப்பை விலக்கும். அந்த வேலையைக் கசப்பின்றிச் செய்யலாம். அதன் உட்கருவை மனம் உணர்ந்தால்,

**இனி எந்த வேலையிலிருந்தும் கசப்பு அடியோடு விலகும்.**

வேலையிலிருந்து கசப்பு விலகினால், மனித வாழ்வு, தெய்வீக வாழ்வுக்குரிய தகுதிகளில் ஒன்றைப் பெறும். இதுவரை விவரம் புரியாமல் கணக்கு என்றால் கசப்பாக இருந்தது. மார்க்கே வாராது. நான் மனம் மாறியபின் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. முதலில் ஆசிரியர் மாறினார். பிறகு புரியாத சில

இடங்கள் புரிந்தன. நான் கடினம் என்று கைவிட்ட விஷயங்கள் கடினமன்று என்றாயிற்று. நாளாவட்டத்தில் அவை சுலபமானதுடன், நான் மற்ற நண்பர்கட்கும் கணக்கு சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். இப்பொழுது கணக்குக் கசப்பாகவோ, கடினமாகவோ இல்லை. மார்க் ஏராளமாக வருகிறது என்ற அனுபவம் மனம் மாறினால் ஏற்படுவதுண்டு.

தினமும் சுமார் $30,000 விற்கும் கடை. பிரதம சேல்ஸ்மேனுக்கு இந்த விஷயத்தைக் கூற முதலாளி முயன்றார். 20 சேல்ஸ்மேன் உள்ள கடை. ஒருவர் தினமும் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் விற்பார்கள். அதற்குரிய கமிஷன் வரும். "இதுவரை நாம் நம் சாமர்த்தியத்தால் விற்றோம், இனி மனத்தால் விற்போம்" என்றார் முதலாளி. இது சேல்ஸ்மேனுக்குப் புரியவில்லை. மற்ற நாடுகளில், வாடிக்கைக்காரர் மனம் குளிர நடப்பார்கள். எப்படி வாடிக்கைக்காரர் சந்தேகங்களைப் போக்குவது, அவரை எப்படித் திருப்திப்படுத்துவது என்பதே சேல்ஸ்மேன் பெற்ற பயிற்சி. முதலாளி அன்னை பக்தர். ஆரம்பத்திலேயே சேல்ஸ்மேன் முட்டுக்கட்டை போடுகிறாரே, இவரை எப்படி வாடிக்கைக்காரரிடம் அனுப்பி வெல்வது என்ற கேள்வி முதலாளிக்கு வந்தபொழுது, ஏன் நாம் இம்முறையை, சேல்ஸ்மேனிடம் கடைப்பிடிக்கக் கூடாது என நினைத்து, மாலை அவரைச் சந்திப்பதாகச் சொன்னார். அத்துடன், சேல்ஸ்மேனிடம் கூறவேண்டியதை அன்னையிடம் கூறினார். அடுத்த நிமிஷம் சேல்ஸ்மேன் "எப்படி எனக் கற்றுக்கொடுத்தால் நானும் பின்பற்றுகிறேன்" என்றார். இவரிடம் அன்னையைப் பற்றிப் பேசலாமா, பேசுவது சரியா என முதலாளி மனத்தால் வாதாடிக் கொண்டிருந்த பொழுது, "இவையெல்லாம் அன்னை முறைகளா? நீங்கள் அன்னை பக்தர் என நான் அறிவேன். பலிக்கிறது என்றால் எனக்கு அன்னை ஆட்சேபணையில்லை" என்றார்.



முதலாளிக்கு சந்தோஷம் வந்தாலும், அன்னையைப் பற்றி அவரிடம் பேசத் தைரியமில்லை. Jesus, God என்று பேசலாம். ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வாடிக்கைக்காரரை திருப்திப்படுத்துவதைவிட அவர் மனதிலுள்ள தெய்வத்தைத் திருப்திப்படுத்துவது நல்லதன்றோ என்றார். முதலாளி அன்னையை விலக்கிப் பேசினாலும், சேல்ஸ்மேன், "அவர் மனதிலுள்ள அன்னை என்றே கொள்ளலாம்" என்றார். தைரியம் வந்ததால், முதலாளி கீழ்க்கண்டவாறு கூறினார்.

- ❖ வாடிக்கைக்காரரைத் திருப்திப்படுத்துவோம்.
- ❖ அதைவிட அவருடைய நியாய மனப்பான்மையைத் திருப்திப் படுத்துவோம்.
- ❖ அடுத்து அவர் மனதிலுள்ள அன்னையைத் திருப்திப் படுத்துவோம்.
- ❖ திருப்திப்படுத்துவோம் என்பதை அவருக்கேற்ப நடப்போம் என்று கூறலாம்.
- ❖ இவையெல்லாம் உயர்ந்த முறைகள். அதிகப் பலன் தரும் என்றாலும், அத்தனையும் புறத்திற்குரியவை.
- ❖ புறம் அகமாவது அதனினும் உயர்ந்த முறை.
- ❖ புறம் அகமாவது எனில் வாடிக்கைக்காரரின் அன்னையை நாடுவதற்குப் பதிலாக, நம் மனதிலுள்ள அன்னையை நாடுவோம்.
- ❖ சரக்கு விற்பதற்குப் பதிலாக, Good Morning என்று கூறி, நம் மனத்துள் சென்று, அங்குள்ள அன்னையில் லயிப்போம்.
- ❖ இதற்கும் அடுத்த கட்டம் ஒன்றுண்டு. அதைப் பிறகு பார்க்கலாம்,

என்று முதலாளி கூறிவிட்டுப் போனார். அரை மணி கழித்து அந்த சேல்ஸ்மேன் முதலாளியைத் தேடி வந்து, "ஒருவர் $2000க்கு T.V. வாங்க வந்தார். நான் நீங்கள் சொன்ன முறையைக் கடைப்பிடிக்க விரும்பினேன். எதிரில் வாடிக்கைக்காரரை உட்கார வைத்துவிட்டு, 'இவற்றை எல்லாம் எப்படிச் செய்வது?' என்று நான் திணறியபொழுது, அவர் என் திணறலைக் கண்டு, 'நான் ஒரு சிறு பொருளுக்காக வந்தேன்' என என் தயக்கத்தைப் போக்க முனைந்தார். அவர் கேட்ட பொருளைக் காட்டினேன். விலை $2000 என்று கண்டார். பேரம் முடிந்துவிட்டது. நான் என் திணறலைவிட்டு வர அவகாசமில்லை. அவர் தாம் வீடு கட்டுவதாகவும், கட்டி முடிந்தபின் Home entertainment வேண்டும்; மீண்டும் வருகிறேன் என்றார். சற்று கழித்து அவற்றைப் பார்க்க விரும்பினார், காட்டினேன். சம்மதமாகப் பேசினார். அதன் விலை $250,000 என்பதால் என்னால் பேரத்தைச் சமாளிக்க முடியாது என உங்களை அழைத்துப் போக வந்தேன்" என முடித்தார். முதலாளி போய் பேரத்தை முடித்தார். $50,000 அட்வான்ஸ் கொடுத்துவிட்டுப் போனார் வாடிக்கைக்காரர். மனதால் செய்வது மதர் செய்வது என்பது பெரிய முறை. அமைதியாக முறையை மனம் ஏற்றுக் கொண்டு நிதானமாகச் செயல்பட்டால், நடப்பதை நாம் நம்ப முடியாது.

இது யோகத்திற்குரிய முறை. சமர்ப்பணம், சரணாகதி எனப் பெயர். ஆரம்பிக்கும் முன் பலிக்கும் முறை. மேலும் ஒரு கட்டம் உண்டு என்றோம். அது என்ன? நாம் நம்முள்ளே சென்று அங்குள்ள அன்னையைத் தேடுவதற்குப் பதிலாக அன்னைக்குகந்த உள்ளம் உடையவரானால், நாம் தேடும் அன்னை மேல் மனத்தில்



இருப்பதையும், அதன் கீழ் அன்னை தம்மை நம் ஜீவனில் பிரதிஷ்டை செய்திருப்பதையும் காணலாம்.

நாம் அன்னையைத் தேடாவிட்டால், அன்னை நம்மைத் தேடி வருவார். அதன்பின் பிரார்த்தனை தேவையில்லை. இந்த முறைகளை எந்த அளவில் பின்பற்றினாலும் நல்லது. முடிவான முறையை முதலாகக் கொண்டு, எல்லாச் சிறிய காரியங்களையும் அப்படிச் செய்வது யோகம்.

❖ முக்கியமான காரியங்களில் இம்முறையை முடிந்த அளவு பின்பற்றினால், மனம் மாறுவது தெரியும். அன்னை பிரத்யட்சமாவார். காரியம் சிறப்பாக முடிந்தாலும், மறந்தே போகும்.

❖ முக்கியமான காரியங்களில் இம்முறையை முடிவான கட்டத்தில் பின்பற்ற முயன்று வெற்றி பெற்று, பெற்ற வெற்றியைப் பூரணம் செய்வது ஆரம்பம்.

❖ பின்னர் மற்ற சிறு காரியங்கட்கும் இவற்றைப் பின்பற்றலாம்.

❖ காரியத்தின் பலனுக்குச் செய்தால் காரியம் நிச்சயம் பலிக்கும்.

❖ காரியத்தைவிட, பலனைவிட, முறை முக்கியம் என்பது மேலும் சிறப்பு.

❖ முறையைவிட வேலை பெரிது.

❖ வேலையைவிட அன்னையை நாடுவது பெரியது.

❖ பெரியதை நாடாத மனம் உயர்ந்த மனம். உயர்ந்த மனத்தை அன்னை நாடி வருவார்.

ரேடியோ ஸ்டேஷன் டைரக்டர் தம் நண்பருடன் வந்த அன்பருக்கு உபசாரமாகச் சொல்லவேண்டி, நீங்கள் AIRஇல்

பேச வேண்டும். ஒரு பேச்சு எழுதிக் கொடுங்கள் என்றார். எழுதிக் கொடுத்த பேச்சு கிணற்றில் போட்ட கல் போலாயிற்று. அன்பர் அதை மறந்து தம் வேலையைச் செய்தபொழுது பிரபல ஆங்கிலப் பத்திரிகை நிருபர் அன்பரை அணுகி, ''உங்கள் திட்டம் பற்றி அனைவரும் பேசுகின்றனர். எங்கள் பத்திரிகையில் அதைப் பற்றி எழுதுங்கள்'' என்றார். எழுதியபொழுது, இக்கட்டுரை மிகச் சிறப்பாக இருக்கிறது. போட்டோ இரண்டு கொடுத்தால், அவற்றையும் பிரசுரிக்கிறோம் என பிரசுரித்தபொழுது ஊர் முழுவதும் இதே பேச்சு.

ரேடியோ ஸ்டேஷன் டைரக்டர் தம் நண்பரிடம் வந்து, ''நான் உங்கள் நண்பரின் சொற்பொழிவைப் படித்தேன். மிகவும் சிறப்பாக இருக்கிறது. அதனால் இதைச் சொற்பொழிவாக்குவதற்குப் பதிலாக உரையாடலாக மாற்ற விரும்பி எழுதியபொழுது, யாரை உங்கள் நண்பருடன் பேசச் சொல்லலாம் என்று நினைத்தேன். நானே உரையாட முடிவு செய்தேன்'' என்றார்.

அந்த ரேடியோ உரையாடல் இரண்டு பெரிய ஊர்களை அடியோடு மாற்றிவிட்டது. மேற்சொன்ன முறைகளைக் கடைப்பிடிக்காத நிலையில் ஏற்பட்ட பலன் இது. முறைகள் பலமானவை. கடைப்பிடிப்பது சிறப்பு.

❖ **அமைதியும், அன்பும் அன்னை.**

❖ **சுத்தமும், சத்தமின்மையும், மெய்யும் அன்னை.**

❋ ❋ ❋





## எனக்கு வேலையில்லை, பிரார்த்தனை பலிக்கவில்லை

''கணவன் வேலையில்லாமலிருக்கிறார். வேலை கிடைக்கப் பிரார்த்தனை செய்தால், பலனில்லை. என்ன செய்வது என்று தெரியவில்லை என்றால், நிதானமாகப் (equality) பிரார்த்தனை செய்தால் பலிக்கும் என்ற பதில் எனக்கு எப்படிப் பயன்படும்? வேலை கிடைத்தால் தானே நிதானம் வரும். நிதானம் வந்தால் வேலை வரும் என்றால் எப்படி? பிரார்த்தனை பலிக்கவில்லை எனில் நம்பிக்கை போதாது என்றார். சென்ற முறை வேலை இல்லாத பொழுது 5 மாதம் கழித்துக் கிடைத்தது. 1 வருஷம் வேலையிருந்தது. மீண்டும் போய்விட்டது. மார்க்கெட்டே சரிவான நேரம். எனக்கு இதற்கு மேல் வழியில்லையா?''

இது பலரும் கேட்கும் கேள்வி. இது சம்பந்தமாக அன்னை கூறியவை,

❖ இனி போக வழியில்லை என்ற நேரமே, என்னை அழைக்கப் பொருத்தமான நேரம். நான் தவறாது, உடனே வருவேன்.

❖ உண்மையான பிரார்த்தனை தவறாது பலிக்கும்.

❖ ஓர் அன்பனுக்கு அன்னையால் பிரார்த்தனை மூலம் வேலை கிடைத்தால், மார்க்கெட் அதன் மூலம் மாறிவிடும்.

❖ நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருந்தாலும், ஆழ்ந்த பிரார்த்தனைக்கு அன்னை, மார்க்கெட்டில் உள்ள (exceptional circumstances) ஏதாவது விசேஷ சந்தர்ப்பம் மூலம் பதில் தருகிறார்.

❖ 3 நாள் இடைவிடாத பிரார்த்தனை பலிக்கவில்லை என்று இதுவரை எவரும் கூறியதில்லை.

சுமார் 1000 பேர் நம்மூரில் வேலையில்லாமலிருந்தால் அவருள் 10 அல்லது 20 பேராவது நிதானமாக, அமைதியாக நிலைமையைச்

சமாளிப்பார்கள். மற்றவர்கள் பல அளவில் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். வாழ்வில் இந்த நிதானமான 10 அல்லது 20 பேர் பெறுவது என்ன?

- *மற்ற 990க்குள்ள அவதியிருக்காது. நிதானமாகப் பிரச்சினையை அனுபவிக்கலாம்.*
- *ஒரு **50** அல்லது **100** வேலை உற்பத்தியானால், அந்த நிதானமான **10** அல்லது **20** பேருக்கு முதலில் கிடைக்கும் எனக் கூற முடியுமா?*
    - ❖ அந்தப் புது வேலைகளில் ஆர்ப்பாட்டம் செய்த சிலர், அழிச்சாட்டியம் செய்த பலர், சிபார்சுள்ளவர்களுக்குக் கிடைக்கும். நிதானமானவரில் ஓரிருவருக்கும் கிடைக்கும். இது வாழ்வு.
    - ❖ ***அன்னையிடம் நிதானமாக உள்ள அனைவருக்கும் தவறாமல் வேலை கிடைக்கும்.***
    - ❖ அன்னைக்கும், வாழ்வுக்கும் இந்த வித்தியாசம் எப்பொழுதும் உண்டு.
- *வேலையில்லாவிட்டால், குடும்பம் எப்படி நடக்கும்? வேலை கிடைக்கும் வரை என்ன செய்கிறோம்? சிறிய வேலையை மனக் கசப்போடு ஏற்கிறோம். முகத்தைச் சுளிக்கும் உறவு, நண்பரிடம் அதைப் பொருட்படுத்தாது போய் உதவி கேட்கிறோம்.*
- *மனம் கசப்பதும், மற்றவர் தரும் அவமானத்தைப் பொறுத்துக்கொள்ளவும் எடுக்கும் முயற்சியை, பிரார்த்தனைக்குச் செலுத்தினால், தவறாது வேலை கிடைக்கும்.*
- *நிலைமையைச் சமாளிக்க எடுக்கும் முயற்சியை, பிரார்த்தனைக்கு செலவு செய்வதில்லை.*

வாழ்வா, அன்னையா என்று வரும்பொழுது, நாம் வாழ்வுடன் சேர்ந்துகொண்டு ஆர்வமில்லாமல் பிரார்த்தனை செய்வதால் பலனில்லை. **வாழ்வை நம்புவதற்குப் பதிலாக, அன்னையை நம்பினால் பிரார்த்தனை தவறாது, தவறவே தவறாது**.

❋ ❋ ❋



# அபரிமிதமான செல்வம்

## அனந்தம், அபரிமிதம், அதிகபட்சம்

நமது அதிகபட்சத் திறமை நம் வாழ்வில் பயன்பட்டால், பலன் அதிகபட்சமாகும். அது அபரிமிதமன்று. அபரிமிதம் அதிக-பட்சத்தைக் கடந்தது. அபரிமிதம் அனந்தமன்று. அனந்தம் என்பது முடிவற்றது.

- ❖ அதிகபட்சம் என்பது நம் திறமைக்கு அதிகபட்சம்.
- ❖ அபரிமிதம் என்பது தேவையைக் கடந்தது.
- ❖ அனந்தம் என்பது இவையிரண்டையும் கடந்த முடிவில்லாத பலன்.

ஆன்மீகரீதியாக உயர்ந்தது என்பது பிரம்மம். தாழ்ந்தது என்பது உடல். இன்று உடல் உழைத்து சம்பாதிக்கிறது. அதிகபட்சம் சம்பாதிக்க அறிவைப் பயன்படுத்துகிறது. ஒரு பில்லியன் டாலர் என்பது 4500 கோடிப் பணம் ரூபாய். உலகில் 450 பேர் இந்த அளவு சொத்துள்ளவர்கள் என்று கணக்கெடுத்-துள்ளார்கள். இவர்கள் அறிவால் உழைத்துச் சம்பாதித்தவர்கள். அறிவிலிருந்து பிரம்மத்திற்கு இடையே 9 நிலைகள் உள்ளன. மேலே செல்வது 9 நிலை, இறங்கி வருவது மேலும் 9 நிலை.

> **பிரம்மம் உடலில் வெளிப்படுவது அனந்தமான அபரிமிதத்தை மனிதயத்தனத்தின் அதிகபட்சமாக நாம் அறிவோம்.**

சாதனை நமது இலட்சியம். அபரிமிதமான பணம் சம்பாதிப்பது நம் சாதனையாக இருப்பது இலட்சியமானால், பணத்தைப் பற்றிய கருத்துகளை விளக்க வேண்டும். இந்த ஞானத்திற்குத் திறன் உண்டு. ஞானத்தைப் பெற்றவர் திறனாக மாற்ற மனத்தாலும்,

ஆத்மாவாலும் உழைக்க முன்வர வேண்டும்.

ஞானம் எப்படிப் பலனாக மாறும்? திறனால் பலனாகும். அறிவு என்பது ஞானம், உறுதி என்பது (will) திறன். உறுதிக்கும் அதனுள் புதைந்துள்ள ஞானம் உண்டு. ஞானத்திற்கு உறுதி பணிந்து செயல்பட்டால், செயல்பாடு ஆகும். அது பாடாவதியாகவும் ஆகும். விவரம் தெரியாமல் உழைப்பது. விவரம் தெரிவது திறமை (skill). அது பாடு என்பதாகாது, வேலையாகும். வேலை தெரியாதவன் திணறுவதை நாம் பார்க்கிறோம். வேலை தெரிந்தவன் ஆர்வமாக, அழகாக வேலை செய்வது பார்க்க இனிக்கும். வேலையை நூறு, ஆயிரம் பாகமாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் செய்யக் கற்றுக் கொள்வது உறுதியான ஞானம் பெறுவதாகும். இது ஞானம் பலனாக மாறும் பாதை. பிரம்மம் உடலில் எப்படி வெளிப்படும், அது எப்படிப் பலனாக மாறும், அது பணமாக எப்படி மாறும் என்ற ஞானத்தை விளக்கமாகவும், விபரமாகவும் இந்நூலிலிருந்து பெறலாம்.

அணுவினுள் அகிலம் முழுவதும் பரவும் சக்தியுண்டு. இதை நேரடியாக, வேறு சிரமமில்லாமல் வெளிப்படுத்தினால், உலகில் சக்திக்குப் பஞ்சமில்லை. (Solar power) சூரிய வெளிச்சம் மின்சாரமாகிறது என்பது ஓரளவு நடைமுறையில் வந்துள்ளது. (Wind power) காற்று மின்சாரமாகிறது என்பதும் ஓரளவு நாம் எங்கும் காண்கிறோம். இவை முழுவதும் நடைமுறைக்கு வந்தால் உலகில் (power) சக்திக்குப் பஞ்சம் உண்டா?

பண்டமாற்றாக ஆரம்பித்தது பணமாயிற்று. பவுன் பணம், பொருள் பணம், currency பேப்பர் பணமாயிற்று. தபால், தந்தி வந்தபொழுது பணத்திற்கு அதிக மதிப்பு வந்தது. விளம்பரம் வந்தபொழுது பேப்பர் விலை குறைந்தது, T.V. செலவில்லாமல் வருகிறது. ஒரு நியூஸ் பேப்பர் அடக்கவிலை ரூ.100/-. அதை 3 ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். மீதி விலையை விளம்பரம்



தருகிறது. இன்ஸுரன்ஸ் மூலம் நாம் சிறு பிரீமியம் கட்டி, பெரிய தொகையைப் பெறுகிறோம்.

கம்ப்யூட்டர்போல் எது புதியதாக வந்தாலும், பொருள்கள் மலிவாகின்றன. அதாவது நமக்கு உபரியாகப் பணம் உற்பத்தியாகிறது. காற்றுபோல ஒரு காலத்தில் பணம் அபரிமிதமாகும். அனைவருக்கும் அது கிடைக்கும். இது சமூகம் பெற்றுக்கொண்டு வரும் திறன். இன்றே அதைத் தன் வாழ்வில் அபரிமிதமாக அனுபவிக்க மனிதன் முன்வரலாம்.

இது யாருக்குப் பலிக்கும்?

பலிக்க என்ன செய்யவேண்டும்?

பலிக்கும் வகை எது? நாம் செய்யக்கூடியது என்ன? நமக்கே பலிக்குமா? நம் போன்றவர் எவருக்காவது பலிக்குமா? என்ற கேள்விகட்கு இந்நூலில் பல இடங்களில் பதில் வரும். முடிவில் இதை விளக்கமாக எழுதுகிறேன். அதன் சுருக்கம்,

- ❖ கை வேலையில் (skill) திறமை சிறந்தவர் - உடல்.
- ❖ பிறர் வாழ மனம் விழைபவர் - உயிர்.
- ❖ பிரம்மத்தை ஞானமாகப் பெறுபவர் - மனம்.
- ❖ செயலில் பிரம்ம ஞானத்தை சத்தியமாக வெளிப்படுத்துபவர்,

ஆகியோருக்குத் தங்கள் வாழ்வில் அபரிமிதமான செல்வத்தை உற்பத்தி செய்யும் திறன் பலிக்கும்.

- ❖ மேல்நாட்டார் செயலில் பிரம்மத்தைக் கண்டவர், உண்மை மட்டும் பேசுபவர்.
- ❖ அவை நம்மிடம் வித்தாக உள்ளன. அகத்திலும், புறத்திலும் அவ்வுண்மை வெளிப்படும்படி, சொல்லும், செயலும் அமைய வேண்டும்.

## மனத்தின் சிருஷ்டித் திறன் - பணம்

உலகம் மனத்தால் சிருஷ்டிக்கப்பட்டது, அகந்தையால் சிருஷ்டிக்கப்பட்டது என்பவை இந்திய ஆன்மீக மரபு. அதனால் வாழ்வு மாயை என்றும் கூறுகின்றனர். உலகத்தை சிருஷ்டித்தது சத்தியஜீவியம் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். மனம் சத்தியஜீவியத்தின் பகுதி (subordinate power). சத்தியஜீவியத்தில் ஜீவியம் இரண்டாகப் பிரிகிறது. ஞானம், உறுதி என்று பிரிகின்றது. ஞானம் உறுதிமேல் செயல்பட்டால் சக்தி பிறக்கிறது. அதுவே life வாழ்வு எனப்படும். மனம் வாழ்வை உற்பத்தி செய்தது. பணம் வாழ்வில் கடுகளவான பகுதி. வாழ்வை உற்பத்தி செய்த மனம் அதன் பகுதியான பணத்தை உற்பத்தி செய்ய முடியும்.

மனத்தில் நல்லதும், கெட்டதும் உண்டு. பணத்தை முடிவில்லாமல் மனம் உற்பத்தி செய்யும் என்பதை நாம் இங்கு எடுத்துக் கொண்டுள்ளோம். மனமே இரு பகுதிகளாக இருப்பதால், மனம் நல்ல பணத்தை உற்பத்தி செய்வதுபோல், கெட்ட பணத்தையும் உற்பத்தி செய்யவல்லது. நடைமுறையில் அவை கலந்தே காணப்படுகின்றன. பணம் நல்லதாக மட்டுமோ, கெட்டதாக மட்டுமோ இருப்பதில்லை. நல்லதும், கெட்டதும் கலந்த மனிதனால் சம்பாதிக்கப்பட்டதே பணம்.

மனத்தின் திறன்கள் பல. பணத்தை உற்பத்தி செய்வது மட்டும் நமக்குரியது. இக்கோணத்தில் மனம் எப்படியிருக்கிறது, எப்படியிருந்தால் பணம் உற்பத்தி செய்ய உதவும் என்பதை,

- ❖ அடுத்தவர் எவரானாலும் மனிதன் அவர் நிலை உயரப் பொறுக்கமாட்டான் என்று கூறலாம்.
- ❖ பிறர் பெருவாழ்வு வாழ மனம் விழைவது பணத்தை மனம் உற்பத்தி செய்ய உதவும்.



இன்று சமூகம் தனிமனிதன் நல்வாழ்வு வாழ பல துறைகளில் பாடுபடுகிறது. எந்தக் காலத்திலும் சமூகம் தனிமனிதனுக்கு உதவியாகயுள்ளது. கடினமான வாழ்வைக் கடுமையற்ற வாழ்வாக மாற்றியுள்ளது. விலங்குபோல் நாடோடியாகத் திரிந்த மனிதனை ஊரும், உறவுமாக வாழ வைத்தது. வேட்டையாடியும், காய்கனியைப் புசித்தவனுக்கும் விவசாயம் ஏற்பட்டது. தொடர்ந்து மனிதனுக்கு சமுதாயம் சேவை செய்கிறது. மருந்து மூலம் வியாதியிலிருந்து விடுதலையளித்ததுபோல் இன்று மனிதன் அனுபவிக்கும் அத்தனை சௌகரியங்களையும் அவனுக்கு அளித்தது சமூகம். சமூகம் மனிதனுக்குச் செய்த சேவைகளில் முக்கியமானவை பல. அவற்றுள் பணம் முக்கியமானது.

**மனிதன் வாழ சமூகம் நல்லெண்ணம் கொண்டுள்ளது.**

இந்த நல்லெண்ணத்தின் அம்சம் பணம், பணம் நமக்குச் செய்யும் சேவைகள். நாளுக்கு நாள் பணம் பெருகுகிறது. பெருகும் பணம் பெருகி வரும் நல்லெண்ணம். காலத்தை வென்று, கர்மத்தை வென்று, நல்லெண்ணமாக உருவம் பெற்றது பணம். பணம் நம் வாழ்வில் பெருக வேண்டுமானால்,

**அனைவரும் தொடர்ந்து உயர வேண்டும் என்ற நல்லெண்ணம் நம் மனத்தில் பெருக வேண்டும். அது அடிப்படையான நிபந்தனை.**

இன்று பெரும் பணக்காரர்களாக இருப்பவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட மனநிலை உள்ளவர்களா என்ற கேள்வி மனத்தில் எழும். இது வேறு கேள்வி. இதனுள் வேறு பல அம்சங்கள் அடங்கியுள்ளன. ஏனெனில் பணத்தைப் பல வழிகளிலும் சம்பாதிக்கலாம். தவறாகவும் சம்பாதிக்கலாம். பணத்தை நல்ல முறையாகச் சம்பாதிப்பது மட்டும் நமக்குரிய கருத்து. இக்கேள்விக்குரிய பதிலின் சுருக்கத்தை மட்டும் கூற முடியும்.

எவர் அதிகப் பணம் சம்பாதித்தாலும் பொதுமக்களுக்கு

ஏதாவது ஒரு வகையில் பெரிய சௌகரியமில்லாமல் சம்பாதிக்க முடியாது.

மனிதன் சுயநலமானவன். அவன் சுயநலத்தை விட்டு, பிறர் நலம் பேணுவது finite மனிதன் infiniteஆக மாறுவதாகும். ஸ்ரீ அரவிந்தர் மனிதனுடைய மிகப்பெரிய இரகஸ்யத்தைக் கூறுகிறார். அது ஆன்மா ஜடத்தை ஆளும் இரகஸ்யம். சமூகத்தில் கிராக்கியான பண்டங்கள் பல. நாளாக ஆக கிராக்கியான பண்டங்கள் அதிகமாகக் கிடைக்க சமூகம் வழி செய்தது. 1952 எலக்ஷனில் சுதந்திரம் பெற்ற காங்கிரஸ் தோற்றதற்கு அரிசி கிடைக்காததே காரணம். "ஆறு அவுன்ஸ் சர்க்கார் அழிக" என்று மக்கள் காங்கிரஸைத் தோற்கடித்தனர். இன்று நெல்லும், அரிசியும், கோதுமையும் உபரியாகக் கிடைக்கின்றன. 1970க்கு முன் கார் வாங்க முன்பணம் கொடுத்து காத்திருக்க வேண்டும். இன்று கார் வாங்க லோன் கொடுக்கும் பாங்க்குகட்கு லோன் பெற ஆளில்லை. ஒரு காலத்தில் கிராக்கியான சரக்கு, பிற்காலத்தில் உபரியாகக் கிடைப்பதுபோல்,

**இன்று கிடைக்காத பணம் எதிர்காலத்தில் காற்று, தண்ணீர், நெல்போல் அபரிமிதமாகக் கிடைக்கும்.**

*தொடரும்...*

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தாழ்ந்தது, உயர்ந்தது என்பவை அடிப்படையில் ஒரே செயல்களாகும். நம் தாழ்ந்த உணர்ச்சியை, உயர்ந்த ஆர்வமாக நாம் கருதும்பொழுது மனம் பொய்யை மேற்கொண்டு வக்கிரமாகப் போகிறது.

தாழ்ந்ததும் உயர்ந்ததும் இறைவனுக்கு சமமான செயல்களாகும்.





## P. 71. அகந்தையினின்று விலகி, ஆர்வம் நிறைந்த பார்வையோடு உலகை நோக்கினால் ஹிருதய சமுத்திரம் தெரியும்

நிலைமை அப்படியேயிருந்து நம் மனம் மாறுவதால் மட்டும் பிரம்மாண்டமான மாறுதல்கள் வாழ்வில் ஏற்படுவதை நாம் அறிவோம். கடைப் பையனாக வேலை செய்து வந்தவன் கோடீஸ்வரன் மகன், சிறுவயதில் தொலைந்துவிட்டான், இன்று வரை அவன் பெற்றோர்களுக்கு அவன் இங்கிருப்பது தெரியாது, இன்று தெரிந்துவிட்டது எனில் அவன் வாழ்வில் ஏற்படும் மாறுதல் பெரியது. அதேபோல் எதிரான செய்தியும் உண்டு. வாழ்வில் உயர்ந்து, பதவி வகிக்கும் பொழுது அவருடைய பிறப்பு விசேஷம், அவரும் அறியாதது, வெளியில் வந்தால், அத்தனையும் போய்விடும்.

- ❖ உலகம் அற்புதமான சலனமுள்ள சக்தியான சமுத்திரம்.
- ❖ வேதத்தில் இதை ஹிருதய சமுத்திரம் என்றனர்.
- ❖ மனிதன் இதை அறிய முடியும்.
- ❖ கவிகளும், முனிவர்களும் மட்டுமே இதைக் காண்கின்றனர்.
- ❖ நாம் உலகை அகந்தை என்பதன் மூலம் காண்பதால் துன்பமும், துயரமும் தெரிகிறது.
- ❖ உலகம் அற்புதக் காட்சி.
- ❖ அகந்தையை அழித்து, ஞானக்கண் திறந்து பார்த்தால் இச்சலனம் தெரியும்.
- ❖ Wordsworth என்ற ஆங்கிலக் கவி இது போன்ற சில வரிகளை எழுதியுள்ளார்.

- ❖ கவிகளும், கலைஞர்களும் இதைத் தவறாது ஏதோ ஓரளவில் காண்கின்றனர்.
- ❖ இந்தப் பார்வைக்கு உலகம் ஜடமாகத் தெரியாது. சலனமான அலைகளாகத் தெரியும்.

The Life Divineஇல் 9ஆம் அத்தியாயம் சத்-புருஷன். மேற்சொன்னது அத்தியாயத்தின் முதல் வரி. அன்னை படத்துள் உயிருடனிருப்பதை, அவர் கண்கள் நகருவதை, படத்தைவிட்டு ஸ்ரீ அரவிந்தர் வெளிவருவதை அன்பர்கள் கண்டுள்ளனர். அவர்கள் யோகத்தை மேற்கொண்டால் ஹிருதய சமுத்திரம் தெரியும். சிருஷ்டிக்கு முன் இருந்தது இச்சமுத்திரம். அதன் முதன் அசைவை வித்து, seed, பீஜம் என்கின்றனர். அதிலிருந்து எழுந்ததே உலகம், பிரபஞ்சம். நாம் அதுபோன்று கருவிலிருந்து உற்பத்தியானோம். அப்படி உற்பத்தியானது உடல். அதேபோல் மனத்திற்கும், உணர்வுக்கும் கருவுண்டு. உணர்வின் கருவை அடைந்தால், வாழ்வு அதிர்ஷ்டமயமாகும். மனத்தின் கருவை எட்டினால் மனத்தில் மேதை பிறப்பான்.

- ❖ ஆசையையும், அகந்தையையும் விலக்கினால் உணர்வின் கருவான பிராணமயப் புருஷனை அடையலாம் (The Life Divine - page 169).
- ❖ மனத்தில் கோபம் போன்ற உணர்வு எழும்பொழுது அதினின்று பிரிந்து விலகினால், முதலில் அகந்தையும், முடிவில் மனத்தின் கருவையும் காணலாம் (The Life Divine - page 514-515).

ஹிருதய சமுத்திரம் இன்று உற்பத்தியாகவில்லை. உலகம் சமுத்திரமாகவே என்றுமிருக்கிறது. அகந்தையின் பார்வைக்கு அது நாம் காணும் உலகம் - மார்க்கெட், மனிதர்கள், etc. - ஆத்மாவின் பார்வைக்கு அது சமுத்திரம்.

❋ ❋ ❋



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - அதிகம் படிப்பது தவறோ?

அண்ணன் - தவறு நிச்சயம் வரும். அது உண்மையில் தவறில்லை. அதிகமாக எதைப் பெற்றாலும் இதைப் போன்ற தவறு எழுவதை நாம் கவனிப்பதில்லை.

தம்பி - அதிகமாக அழகிருந்தால்,

அண்ணன் - கர்வம் எழும்.

தம்பி - செல்வமிருந்தால்,

அண்ணன் - செல்வம் பல வகையான தவறுகளை எழுப்புவதை நாம் அறிவோம்.

தம்பி - நான் சொல்வது வேறு. அதிகம் படித்த குழந்தைகள் மற்றவரோடு பழகத் தெரிந்து கொள்வதில்லை. படிப்பால் குழந்தை தனித்து விடுகிறது. மற்ற குழந்தைகள் அனைவருடனும் கலந்து கொள்வதைப் போல் கலந்து (adjust) கொள்ள முடிவதில்லை. அதனால் பிரச்சினை எழுகிறது.

அண்ணன் - இது பிரச்சினைதான். ஆனால் படிப்புக்கு மட்டும் உள்ளதன்று. எந்த அம்சம் அதிகமானாலும், இந்தப் பிரச்சினை எழும். நாம் தண்ணீரை அதிக அளவு சுத்தம் செய்து பயன்படுத்தினால், வெளியில் போய் சாப்பிட முடியாதன்றோ!

தம்பி - எப்படித் தீர்ப்பது?

அண்ணன் - எந்தப் பிரச்சினையையும் அது வந்த வழியே

போனால், தானே தீர்ந்துவிடும்.

தம்பி - புரியவில்லை.

அண்ணன் - எப்படி அதிகம் படிக்க வைத்தோம்?

தம்பி - குழந்தையை அதிக நேரம் படிக்க வைத்தோம்.

அண்ணன் - அது விளையாடும் நேரத்தில் அதைப் படிக்கச் சொன்னோம். படிப்பை விளையாட்டாகச் சொல்லிக் கொடுக்கும் முறையில் இந்தக் குறை வாராது.

தம்பி - விளையாடும் நேரத்தில் படிப்பதாகக் குழந்தை வருத்தப்படுவதால் பிரச்சினை வருகிறது என்று சொல்கிறீர்களா?

அண்ணன் - படிப்பையே விளையாட்டாகப் போதிக்கும் பள்ளியில் குழந்தைகள், விளையாட்டுப் போய்விட்டது என ஏங்குவதில்லை.

தம்பி - அதிகம் படித்த குழந்தைகள் தன்னோடொத்த மற்ற குழந்தைகளுடன் சமமாகப் பழக முடிவதில்லை. அதுவே பிரச்சினை.

அண்ணன் - விளையாட்டுப்போல் பயின்றால், அக்குழந்தைகள் தன்னோடொத்த (in mental age) மற்றவர்களுடன் சமமாகப் பழகும். பழக முடியவில்லை என்ற நிலை ஏற்படாது.

தம்பி - நம் இன்ஜினியர் பையனை வீட்டிலேயே 11 வயது வரை படிக்க வைத்தார்கள். அவனுக்கு M.A. பையனைவிட ஆங்கில அறிவும், B.A. பெற்றவனை விட மற்ற அறிவுமிருக்கிறது. அவனுக்கு 11 வயது குழந்தைகளுடன் சமமாக விளையாட முடிவதில்லை.



அண்ணன் - இது பிரச்சினைதான். மேலும் ஒரு பிரச்சினையுண்டு. அது வெளிநாட்டிலுள்ள நம் குழந்தைகட்குரியது. 11 வயது இந்தியக் குழந்தை 11 வயது அமெரிக்கக் குழந்தையுடன் விளையாட முடியாது. அது நம்மூர் 18 வயது பையனைப் போலிருக்கும். இந்தப் பிரச்சினையில்லை, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுண்டு. பெற்றோர் அன்னை பக்தரானால் தீர்வுண்டு.

தம்பி - இன்ஜினியர் தரிசனத்திற்கு வருவார்.

அண்ணன் - அது போதாது. அன்னையை அறிந்தவராக இருக்க வேண்டும். தரிசனத்திற்கு வருபவர் அன்பர். நாம் சொல்வது இரண்டாம் கட்டம் வந்த அன்பருக்குத் தான் பலிக்கும். அன்னை என்பதை organisation, institution, force, consciousness, atmosphere, god, plane, ஸ்தாபனம், சக்தி, ஜீவியம், சூழல், தெய்வம் என அறிந்திருக்க வேண்டும்.

தம்பி - பிரச்சினைக்கும், அவற்றிற்கும் என்ன தொடர்பு?

அண்ணன் - Force, personal force, limited force, force of consciousness, சக்தி, தனிமனித சக்தி, சிறு சக்தி, பொதுவான சக்தி, ஜீவிய சக்தி என்பவற்றை விவரமாகத் தெரிந்திருந்தால்தான் இப்பிரச்சினை தீர உதவும். அன்னை எனும் சக்தி, யாருக்கும் அவர் விரும்புவதைத் தரவல்லது, அவருக்குத் தேவைப்பட்டதைத் தரவல்லது, இவை குறைந்தபட்சத் திறமையைப் பூர்த்தி செய்யவல்லது என்பவற்றைப் புரிந்துகொள்ள மேற்சொன்ன விளக்கம் தேவை.

தம்பி - இவையெல்லாம் நம் அன்பர்கள் வாழ்வில் இன்று

நடக்கிறதே.

அண்ணன் - நடக்கிறது என்பது உண்மை. அதை அன்பர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதும் உண்மை. நம்மை அறியாமல் பெறும்பொழுது நாம் பெறுவது குறைந்தபட்சம். விவரமாகத் தெரிந்தால் அதிகம் பெறலாம். அதிகபட்சம் பெற அன்னையை அதிகபட்சம் அறியவேண்டும்.

தம்பி - இவையெல்லாம் புரிய படிப்பு வேண்டும்.

அண்ணன் - படிப்பிருந்தால் நல்லது, இல்லாவிட்டாலும் பக்தியும் நம்பிக்கையுமிருந்தால் இவை புரியும். ஒரு வகையில் இவை உயர்ந்த தத்துவங்கள், வேறு வகையாகப் பார்த்தால், எந்த இந்தியனுக்கும் புரியக்கூடியவை, நுணுக்கமாக முயலவேண்டும்.

தம்பி - அன்னை இதைத்தான் நமக்கு ஞானம் உண்டு என்கிறாரோ?

அண்ணன் - இந்தியர்கட்கு அன்னையை அறிவது பெரிய பாக்கியம். நீ சொல்லும் குழந்தைக்குப் பழகப் பிள்ளைகள் இல்லை என்பது குறை. இந்தக் குறையைப் பல வகைகளில் போக்கலாம். அதற்குத் தகுந்த பள்ளியில் சேர்த்தால் அக்குறை விலகும். அது எளிது. அன்னைக்குக் குழந்தையைச் சமர்ப்பித்தால், குறை விலகும். குழந்தை மீதுள்ள கவலை எழுந்து மனத்தைத் தொடுமுன், அன்னையை அழைத்தால், பாரம் நம்மிடமிருந்து அன்னைக்குப் போகும். அதன்பின் சூழல் மாறும், குழந்தை மாறும், நிலைமை மாறும்.



தம்பி - இது சுலபமாக இருக்கிறதே. ஏன் நீங்கள் சொல்லும் தத்துவமெல்லாம்?

அண்ணன் - சமர்ப்பணம் இதுபோல் பலிக்க, கவலை மனத்தைத் தொடுமுன் அன்னையை அழைக்கவேண்டும். அது முடிந்தால் தத்துவம் தேவையில்லை. அது முதிர்ந்த சாதகராலேயே முடியாத விஷயம். அதைவிடத் தத்துவம் எளிது.

தம்பி - சொந்தக் குழந்தை என்பதால் அது முடியும்.

அண்ணன் - குழந்தை மீது அன்பிருந்தால் முடியும். ஒரு சில தாயாருக்கே அதுபோன்ற அன்பிருக்கும். பெரும்பாலும் அந்த அளவு குழந்தை மீது அன்பிருக்காது. அதுபோன்ற சமர்ப்பணத்தைச் செய்பவர் அக்குழந்தையைப் பொருத்தவரை சாதகி, யோகி. அதற்கடுத்தது ஞானம். யோக நிலை இல்லாவிட்டால், அன்னை யார் என்ற ஞானம் இருந்தால், அந்த ஞானம் பலிக்கும். Knowledge is Power.

தம்பி - அவ்வளவு பெரிய ஞானத்தைச் சாதாரணப் பெண்கள், அதுவும் படிக்காத பெண்கள் பெற முடியுமா?

அண்ணன் - தாய் என்பதால், அந்த விஷயத்தில் இந்த ஞானம் பலிக்கும். அதுவே ஆன்மீகத்தின் சிறப்பு, அன்னையின் உயர்தனிச் சிறப்பு.

தம்பி - படிப்பு அறிவு இல்லாவிட்டாலும், உணர்வு ஆழ்ந்து பூரணமாக உள்ள இடத்தில் ஆன்மீகம் பலன் தரும். அன்னை அதற்கடுத்த பலனையும் தருவார். பலன்

மனநிலைக்கு, புறத்தோற்றத்திற்கு இல்லை.

அண்ணன் - Force சக்தி என்பது குறிப்பிட்டதானால், குறிப்பிட்ட வேலைக்கு மட்டும் பயன்படும். பேப்பர் எழுதப் பயன்படும், உணவாகப் பயன்படாது. சக்தி பொதுவானால் impersonal force எந்தக் காரியத்திற்கும் பயன்படும். உடலில் தெம்பிருந்தால் பல வகையான காரியங்களைச் செய்யலாம். பணம் general force பொதுவான சக்தி. எந்த வேலைக்கும் பயன்படும். பலன் பயன்படுத்துபவரைப் பொருத்தது. Personal force, impersonal force, general force, particular force, universal force, Consciousness-Force, தனிப்பட்டது, பொதுவானது, குறிப்பானது, பிரபஞ்சத்திற்குரியது, ஜீவிய-சக்தி என்பவை படிப்படியாக உயரும் நிலைகளில் அமைந்துள்ளன.

தாயார் சொல்வதை அவள் குழந்தை கேட்கும் எனில் அது personal force. அந்தக் குழந்தையிடம் மட்டும் செல்லும் சக்தியிது. பள்ளிக்கூடம் 9 மணிக்கு வர வேண்டுமென்ற சட்டம் impersonal force எல்லாக் குழந்தைகளையும் கட்டுப்படுத்தும். சென்னை - பாண்டி பஸ் டிக்கட் ரூ.75 எனில், அந்தப் பஸ்ஸில் பிரயாணம் செய்பவர் அனைவருக்கும் அது பொது வசதி. ஊனமுற்றவருக்குரிய சலுகை குறிப்பிட்ட சக்தி. நல்லது நல்லதைச் செய்யும் என்பது எந்த நாட்டிற்கும், எந்தக் காலத்திற்கும் பொது. ஜீவிய-சக்தி இவற்றை எல்லாம் கடந்தது. இவற்றை எல்லாம் தன்னுட் கொண்டது. ஜீவியம் சிருஷ்டிக்கு அடிப்படை. அதனினின்று வரும் சக்தி ஜீவிய-சக்தி.



ஆகர்ஷணம், எலக்ட்ரிசிட்டி, காந்தம் போன்ற அடிப்படையான பிரபஞ்சச் சக்திகளைத் தன்னுட் கொண்டது ஜீவிய-சக்தி. அன்னை அவதரிக்குமிடம் அது. Mother Force அன்னை சக்தி என்றால் என்ன?

தம்பி - இத்தனைச் சக்திகளையும் தன்னுட்கொண்டதா அன்னை-சக்தி?

அண்ணன் - அத்துடன், இத்தனைச் சக்திகளாகவும் செயல்பட வல்லது.

தம்பி - இதை எப்படி அன்பர்கள் புரிந்துகொள்வார்கள்?

அண்ணன் - நீ கடையில் போய் அலமாரி வாங்கினால், எப்படி வீட்டிற்குக் கொண்டு வருவாய்?

தம்பி - வண்டி வைத்துக் கொண்டு வருவேன்.

அண்ணன் - பொருளை வீட்டிற்கு எடுத்து வருவது நம் வேலை. ஒருவர் வந்து அந்த அலமாரியை உன் வீட்டிற்குக் கொண்டு வர உதவினால்,

தம்பி - என்ன இல்லாததைச் சொல்கிறீர்களே.

அண்ணன் - அப்படி நடந்தால், நாம் எப்படிப் புரிந்து கொள்கிறோம்?

தம்பி - அதெல்லாம் புரியாது. சௌகரியம் என வைத்துக் கொள்வோம். யோசனை புலப்படாது.

அண்ணன் - கடையின் ஏற்பாடு என்றால்,

தம்பி - அலமாரி விற்கச் செய்வதாகக் கொள்வோம்.

அண்ணன் - மற்ற கடைகள் செய்யாதபொழுது ஏன் இவன் மட்டும் செய்யவேண்டும்?

தம்பி – அதிக வாடிக்கைக்காகச் செய்கிறார்கள் எனப் புரியும்.

அண்ணன் – அதைச் செய்ய கடைக்கு டெலிவரி சிஸ்டமும் தேவையல்லவா?

தம்பி – இப்போ புரியுது. நாம் போகுமிடமெல்லாம் நமக்கு அருள் உதவுகிறது எனில் அன்னை, சர்க்கார் ஸ்தாபனம் போல இருக்கிறார். நமக்குத் தேவையானவையெல்லாம் அருள் தருகிறது எனில், அத்தனை டெலிவரி சிஸ்டமும் அவரிடம் இருக்கிறது என்று அர்த்தமா?

அண்ணன் – இது கடவுள்களுக்கோ, சர்க்காருக்கோ, வேறு எதற்கோ இல்லாத சக்தியல்லவா?

தம்பி – அது எப்படி ஏற்பட்டது?

அண்ணன் – கம்ப்யூட்டர் ஸ்பெல்லிங் செக் பண்ணுகிறது எனில், அதனுள் உள்ள chipஇல் spelling இருக்கிறது என நாம் அறிகிறோம்.

தம்பி – அன்னைக்கு அந்த சக்தி எப்படி வந்தது?

அண்ணன் – சத்-சித்-ஆனந்தம் என்ற சச்சிதானந்தத்தில் சித் என்பது சித் ஆகவும், சக்தியாகவும் சித்-சக்தி எனப் பிரியுமிடத்தில் அன்னை அவதரிக்கிறார். உலகமே அந்த சக்தியால் உற்பத்தியாவதால், அன்னை சக்திக்கு அனைத்து சக்திகளின் திறனுண்டு.

தம்பி – சிவபெருமானுக்கும், விஷ்ணுவிற்கும் இல்லையா?

அண்ணன் – நம் அன்பர் பெறும் உதவிபோல சிவபக்தர்கட்குக் கிடைப்பதாகக் கேள்விப்படுகிறாயா?

தம்பி – தெரியாதே.



அண்ணன் – ஒரு வீட்டில் திருடு போனால், நீ கூப்பிடாவிட்டாலும் போலீஸ் வரும். நீ போய் சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. குற்றம் நடப்பது தெரிந்தால் போலீஸ் தானே வரும். மனைத் தகராறு, நிலம் தகராறு எனில் கோர்ட் நம்மைத் தேடி வந்து நியாயம் கொடுக்காது. நாமே போய்க் கேட்டாலொழிய கோர்ட் செயல்படாது.

தம்பி – அன்னை போலீஸ் போன்றவர், மற்ற தெய்வங்கள் கோர்ட் போன்றனவா?

அண்ணன் – அடிப்படையில் அன்னை நம்மைத் தேடி வருகிறார். சில விஷயங்களில் கூப்பிட்டால்தான் அன்னையால் செயல்பட முடியும். ஒரு வித்தியாசம். மந்திரம், பூஜை, ஸ்தோத்திரம், விரதம் எதுவுமில்லாமல் கூப்பிட்டால் வருவார். மற்ற தெய்வங்களைக் கூப்பிட அதற்குரிய முறை தேவை. அன்னைக்கு அவை தேவையில்லை.

தம்பி – அன்னை-சக்தி எப்படியெல்லாம் செயல்படும் எனத் தெரிந்தால், அதற்கு மேலும் சக்தியுண்டா?

அண்ணன் – தெரிவது எனில் சற்று விவரம் தெரிந்தவராக இருக்க வேண்டும். மேலும் ஏன் அன்னைக்கு அந்த சக்தி இருக்கிறது எனத் தெரிய வேண்டும்.

தம்பி – தெரிந்தால் மட்டும் போதுமா? அதை நம்ப வேண்டாமா?

அண்ணன் – இருப்பது தெரிய வேண்டும். ஏனிருக்கிறது என்று தெரிய வேண்டும். அதை நம்பவேண்டும். நம்பினால் அதற்கு சக்தியுண்டு.

தம்பி – என்ன பலனிருக்கும்?

அண்ணன் - நம்பிக்கைக்குரிய பலனிருக்கும். ஓரளவு நம்பிக்கை இருந்தால், குழந்தை பம்பாய் போக உதவி வரும். அதன் மூலம் பிரச்சினை தீரும். முழு நம்பிக்கை இருந்தால் உள்ளூர் நிலைமை மாறி, பம்பாய் போய் வரும் பலன், போகாமல் வரும்.

தம்பி - அன்னையிடமிருந்து பிரார்த்தனை பலிக்கும்பொழுது ஏன் பலிக்கிறது, எப்படிப் பலிக்கிறது, இது எப்படி அன்னை சக்தியால் முடிகிறது என யோசனை செய்து புரிய வேண்டுமானால், அதற்கு The Life Divine படித்திருக்க வேண்டும்.

அண்ணன் - நாம் படிக்காவிட்டாலும் படித்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

தம்பி - பக்தியும், நம்பிக்கையுமிருந்தால் படிக்காமலேயே புரியுமா?

அண்ணன் - புரியாது. புரிந்தால் வரக்கூடிய பலன் வரும்.

*தொடரும்...*

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மிகப்பெரிய பலன் மிகச்சுருக்கமாக அமையும் வழியுண்டு. அதிகபட்ச அறிவைச் செயல்படுத்தி, கட்டுப்படுத்த முடியாத ஆசையை, அதற்கு சேவை செய்யச் சொல்வதே அவ்வழி.

வக்ர புத்தியை ஞானத்தால் அடக்குவது சுருக்கு வழி.





## புலன்களுக்குப் புலப்படாதது

*இல. சுந்தரி*

பக்கத்து வீட்டு லட்சமி படித்த பெண். வேலை பார்க்கின்றவள். சிறந்த அன்னை பக்தை. எனவே அவள் ஸ்ரீ அன்னையின் திருவுருவப் படம் ஒன்றைக் கொடுத்து, ‘‘இதைக் குழந்தையிடம் கொடுத்து வையுங்கள். இவரே அவளுக்குத் துணையிருப்பார்’’ என்று கூறினாள்.

ராமையாவும் குழந்தையைச் சமாதானப்படுத்த வேறு வழியின்றி, ‘இதுவும் தெய்வச் செயல்’ என்று புரியாமலேயே படத்தைக் குழந்தையிடம் கொடுத்தார்.

குழந்தையின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. மிகுந்த பரவசமானாள். கருணை பொங்கும் சிரிப்புடன் கம்பீரமாய்க் காட்சி தரும் தன் பாட்டியைக் கண்டு பெருமிதம் கொண்டாள் சிறுமி. அந்தப் படத்திலுள்ள தன் பாட்டியுடன் பேசி மகிழ்ந்தாள். அந்தத் தெய்வீகப் பாட்டியின் வரவிற்குக் காத்திருந்தாள்.

ஒவ்வொரு நாளும் தன் கனவில் பாட்டியார் வந்து தன்னை வருடிக் கொடுப்பதை அனுபவித்தாள். சொல்லிக் கொடுப்பதைக் கற்றுக்கொண்டாள். வீட்டின் பொருள்களைத் தன் பிஞ்சுக் கைகளால் இவள் ஒழுங்கு செய்வதைக் கண்ட ராமையா, ‘‘என்னம்மா செய்கிறாய்?’’ என்பார்.

‘‘ஒழுங்காகப் பொருட்களை வைக்க வேண்டும் என்று கனவிலே பாட்டி சொன்னாங்களே, அதைத்தான் செய்கிறேன்’’ என்பாள்.

இன்னும் இதுபோல் எத்தனையோ. பாட்டியின் நினைவு குழந்தையை நாளுக்கு நாள் அழகுற வளர்த்தது ராமையாவிற்கு வியப்பூட்டியது.

சப்தமிட்டுப் பேசக்கூடாது என்பாள். பொருள்களைக் காலால் இடறக்கூடாது என்பாள். குப்பையை வீட்டில் போடக்கூடாது என்பாள். சட்டை சிறிது அழுக்கானாலும் சுத்தம் செய்யவேண்டும் என்பாள்.

மேல்நாட்டுப் பாட்டியைச் சிறுமி கற்பனை செய்கிறாள் என்று ராமையா நினைத்துக் கொண்டார்.

லட்சுமியோ, அன்னையின் சட்டங்களைக் குழந்தை கடைப்பிடிப்பது கண்டு மகிழ்ந்தாள்.

இவையேதுமறியாத குழந்தை தன் பாட்டியின் அன்பில் தன்னை முற்றிலுமாகக் கொடுத்திருந்தாள்.

ஒரு நாள் பாட்டியாரிடமிருந்து இவளுக்கு நிறைய உடைகள், பரிசுப் பொருட்கள் யாவும் வந்தன. ஆனால் அதில் பாட்டியின் முகவரியில்லை. எல்லாம் ஏதோ மாய மந்திரம் போலிருந்தது. உண்மையில் அதை அவள் பாட்டியே அனுப்பியிருந்தார்.

திடீரென்று ஒரு நாள் நாகரீகமாய் உடையணிந்து இனிய சுபாவத்துடன் மேனாட்டு இளம் பெண்ணொருத்தி வந்தாள். இவளைப் பற்றி விசாரித்தாள். ராமையாவுக்கு மகிழ்ச்சி ஒரு புறம், வியப்பு ஒரு புறம். ஒன்றும் புரியவில்லை. விரைந்து சென்று லட்சுமியை அழைத்து வந்தார். லட்சுமி வந்திருந்த பெண்ணிடம் இனிய முறையில் உரையாடினாள். வந்திருந்த பெண் தமிழ் கலந்த ஆங்கிலம் பேசினாள். தான் அமிர்தாவின் பாட்டியார் செய்த ஏற்பாட்டின்படி அவளை அழைத்துச் செல்ல வந்திருப்பதாய்க் கூறினாள்.

ஒரே குழப்பம். இதை எப்படி நம்புவது? அவள், அமிர்தாவின்



பாட்டியார் மருத்துவமனையில் இருந்தபோது தன்னுடன் இவள் சேர்ந்திருக்கும்படி ஒரு புகைப்படம் எடுக்கச் செய்து, அத்துடன் இவள் வசம் குழந்தையை ஒப்படைக்குமாறு கடிதமும் எழுதி அனுப்பியதாகக் கூறினாள். அது இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இவள் தன் விசிட்டிங் கார்டைக் கொடுத்து, தன் பெயர் மீரா என்பதையும், தான் ஆரோவில்லில் வசிப்பதையும், வருடத்தில் ஒரு முறை அமெரிக்கா சென்று வருவதையும், அப்படிச் சென்ற சமீபத்தில்தான் அமிர்தாவின் பாட்டியாரைச் சந்தித்த விபரமும் கூறினாள். இறுதியில் அவள் பாட்டியும் இறந்துபோன செய்தியை எப்படிக் குழந்தையிடம் சொல்வது? அதைச் சொல்ல வேண்டாம் என்று முடிவாயிற்று.

''குழந்தை எங்கே? அவளைக் கூப்பிடுங்கள்'' என்றாள் மீரா.

அதற்குள் அவள் பெயரைக் கேட்டு வியப்படைந்தாள் இலட்சுமி. "உங்கள் பெயர் மீராவா? இது இந்தியப் பெயராயிற்றே?" என்று அன்பும் ஆச்சர்யமுமாய்க் கூறினாள்.

''நான் மேல்நாட்டுப் பெண்தான். என் பெற்றோர் அன்னை மீது கொண்ட அன்பால் எனக்கு வைத்த பெயர் இது. சிறு வயது முதல் அன்னையைப் பற்றிக் கேட்டும், படித்தும், அவரது கோட்பாடுகளில் பெரிதும் நாட்டம் கொண்டு ஆரோவில்லுக்கு வந்து தங்கிவிட்டேன்'' என்றாள்.

எல்லாம் அன்னைமயமாவதைக் கண்டு லட்சுமி மகிழ்ந்தாள்.

வெளியே விளையாடச் சென்றிருந்த அமிர்தாவை அழைத்து வந்து மீரா முன் நிறுத்தினாள் லட்சுமி.

சிறுமி, மீராவிடம் விரைந்து சென்று, ''ஆண்ட்டி, நீங்க வந்திட்டீங்களா? என்னை என் பாட்டியிடம் அழைத்துப் போவீர்களா?'' என்றாள்.

அறிமுகமானவர்களிடம் பேசுவதுபோல் இவள் பேசுவது எல்லோர்க்கும் வியப்பளித்தது.

*தொடரும்...*

❋ ❋ ❋

## சொசைட்டியின் வெளியீடுகள்

**கர்மயோகியின் நூல்கள்:**

| | | |
|---|---|---|
| **1.** | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | **ரூ. 20** |
| **2.** | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | **ரூ. 20** |
| **3.** | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | **ரூ. 20** |
| **4.** | சிறியதும் பெரியதும் | **ரூ. 20** |
| **5.** | கணவன் மனைவி | **ரூ. 20** |
| **6.** | இரத்தினச் சுருக்கம் | **ரூ. 20** |
| **7.** | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | **ரூ. 40** |
| **8.** | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | **ரூ.100** |
| **9.** | அதிர்ஷ்டம் | **ரூ.100** |
| **10.** | பேரொளியாகும் உள்ளொளி | **ரூ.100** |
| **11.** | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | **ரூ.100** |
| **12.** | பரமனை நாடும் ஜீவாத்மா | **ரூ. 20** |
| **13.** | ஸ்வரூபம் சுபாவம் | **ரூ. 20** |

**தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவு தபால் கட்டணம் ரூ.20/- M.O. சேர்த்து செய்யவும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12 First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

# கான்சர்

பிரார்த்தனை பலிப்பதை அறிபவர்கள் எப்படிப் பலிக்கிறது என அறிவதில்லை. எந்தப் பிரச்சினையானாலும் பிரார்த்தனை செய்தவுடன் மனத்தின் ஆழத்தில் பாரம் நீங்கும். அந்த நேரம் போட்ட வேலைக்கு உத்தரவு ஆபீசில் எழுதிவிட்டிருப்பார்கள். நமக்குக் கையில் ஆர்டர் வரும்வரை தெரிவதில்லை. மனம் லேசானவுடன் பிரச்சினை தீர்ந்தது என்பதை அறிவு ஏற்பதில்லை.

வாஷிங்டனிலிருந்து அன்பர் தமக்கு prostate cancer எனவும், ஆரம்பத்திலேயே தெரிந்துவிட்டதால், சுலபமாகக் குணப்படுத்தலாம் என்றும் எழுதியிருந்தார். கான்சர் என்றவுடன் எவருக்கும் பயம் ஏற்படுவதுபோல் இவருக்கும் வந்தது. இவருக்கு பிளசிங் பாக்கட் போய்ச் சேர்ந்தது. கடிதம் எழுதினேன். இவை சேர்வதற்கு முன் கான்சர் இவரை விட்டு அகன்றதை நான் அறிவேன். அவருக்கு நம்பிக்கை ஏற்படும்படிச் சொல்ல என்னால் முடியவில்லை.

கான்சர் என்று தெரிந்தவுடன், அது பரவாமல் பார்ப்பது முக்கியம். அவரை விட்டு கான்சர் முழுவதும் விலகியபின், அவர் எடுத்த முயற்சிகள் (medical treatment), பட்ட அவதிகள் சொல்ல முடியாது. அவருடைய டாக்டர்கள் அனைவரும் வழக்கப்படி எல்லா டிரீட்மெண்ட்டுகளும் சொல்கிறார்கள். பயப்பட ஒன்றுமில்லை எனவும் கூறுகிறார்கள். டிரீட்மெண்ட் தேவையில்லை, கான்சர் விலகிவிட்டது என்ற செய்தியைச் சொல்ல முடியவில்லை. டீரீட்மெண்ட் முடிந்து அதன் result தெரிய ஆப்பரேஷன் செய்யவேண்டும். அதற்கும் ஏற்பாடாயிற்று. அப்பொழுது அவர் எழுதிய கடிதத்தின் பகுதிகள், "22ஆம் தேதி ஆப்பரேஷன். முன்கூட்டி டெஸ்ட் உண்டு. என் ஆரோக்கியம் வெண்கலம் போலுள்ளது. மனம் தெம்பாக இருக்கிறது. என் குடும்ப டாக்டர் இந்த ஆண்டு உங்கள் டாக்டர்கள் செய்யும் ஆப்பரேஷனில் உங்களைப்போல் உடல் நலமுள்ளவரிருக்கமாட்டார் எனக் கூறுகிறார். தெம்பு அன்னையும் அன்பர்களும் கொடுத்தது. நான் Synthesis 446ஆம் பக்கம் வரை படித்தேன்".

ஆப்பரேஷன் முடிந்து கான்சர் சுவடில்லை என்று கூறிவிட்டனர்.

- ❖ *மனம் டெஸ்டை நம்புவதால் ஆப்பரேஷன் வேண்டியதாயிற்று. ஆப்பரேஷன் கான்சருக்காக இல்லை, டெஸ்ட்டுக்காக.*
- ❖ *அவருடைய சொந்த டாக்டருக்கு அவருடம்பில் கான்சர் இல்லை என்று தெரிகிறது.*
- ❖ *அவர் email வந்த அன்று கான்சர் அவரைவிட்டு விலகியதை அவருக்கு அறிவிக்கும் நிலையில் நானில்லை.*

❋ ❋ ❋

# தண்டிப்பது அவசியம்

இனிய நண்பர்களில் ஒருவர் அடுத்தவரை மட்டம் தட்டும் நேரம் உண்டு. கணவன், மனைவி உறவு இந்தக் காரணத்தால்தான் கசந்துபோகிறது. நல்லவர்கட்கும் தம்மை மீறி அதிகாரம் செய்யத் தோன்றும். அன்னைக்குப் பிடிக்காதது பல. அதில் இது முதன்மையானது. அன்னை எவரையும் தண்டித்ததில்லை என்ற சட்டத்திற்கு விலக்கு ஏற்படுத்திய இடம் இது.

ஆபீசில் இரு நண்பர்கள், நெருக்கமானவர் எனப் பெயர் பெற்றவர்கள். ஒருவருக்கு மேற்சொன்ன அதிகாரம் செய்யும் assertion உண்டு. ஒரு நாள் தம் ஆபீசிலிருந்து நண்பர் ஆபீசில் வேலை செய்யும் குமாஸ்தாவைக் கூப்பிட்டு அனுப்பினார். நண்பர் அனுப்ப மறுத்துவிட்டார். கேட்டவருக்கு அவமானம், வருத்தம். சற்று நேரம் கழித்து அனுப்ப மறுத்தவர் இவர் குமாஸ்தாவைக் கூப்பிட்டு அனுப்பினார். இல்லை என்று கூறும் பழக்கமில்லாததால் இவர் அனுப்பிவிட்டார். அனுப்பிய பிறகு நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிட்டோம் என நினைத்தார். அன்னையையும் அவர் கட்டுப்பாடுகளையும் ஏற்றுக்கொண்ட ஆரம்பம். மனம் வாதாடியது. அவர் அனுப்ப மறுத்தால், நானும் மறுக்கலாமா என்று கேட்டது. அன்னை விதிவிலக்காக தண்டித்த செய்திகள் மனத்தில் வந்தன. அரை மணியாயிற்று. மீண்டும் ஒருவரை மறுத்தவர் கூப்பிட்டு அனுப்பினார்.

- ❖ *தண்டிப்பது தவறு.*
- ❖ *அகம்பாவம் உள்ளவரை தண்டிக்காமலிருப்பது தவறு.*
- ❖ *எதைத் தண்டிக்கக் கூடாது, எதை அவசியம் தண்டிக்க வேண்டும் என்று பாகுபாடு வேண்டும்.*
- ❖ *மனதில் அகம்பாவமில்லாமல் (assertion) தண்டிக்க வேண்டியதைத் தவறாமல் தண்டிக்க வேண்டும்.*

நாம் அறியாமையாலோ, பெருந்தன்மையாலோ தண்டிக்க மறுத்தால், அன்னை தண்டிப்பது அவசியம் என்று கூறுகிறார்.

**இம்முறை அனுப்ப மறுத்துவிட்டார் அன்பர்.**

❋ ❋ ❋